பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்

பம்பையே வாங்குங்கள்

# உதயன்

விலை ரூ2/50

When only
The best is
Good Enough



Buy
Solide Pumps

சுடர்: 4 சுக்கில ஆனி மீ 26 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 06 (10 . 07 . 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 183

# கல்முனையில் நேற்று ஊரடங்கு; பதற்ற நிலை தொடர்கிறது!

## ★ ஆயுதக்குழு தடுத்து வைப்பு ★ பொலீஸ்காரர் கொலை இரண்டின் எதிரொலியாகவும் நெருக்கடி நிலைமை

மட்டக்களப்பு, ஜூலை 10

கல்முனைப் பகுதியில் சனிக்கிழமையும், நேற்றும் சங்கிலித் தொடர் போல அசம்பாவிதங்கள் சில இடம்பெற்றன. அவற்றைத் தொடர்ந்து அங்கு பெரும் பதற்றமும் நெருக்கடியும் தோன்றியுள்ளன.

சிறீலங்கா பொலீஸார் இருவர் கடத்தப்பட்டு அவர்களில் ஒருவர் கொலை செய்யப்பட்டார். அதன் எதிரொலியாக ஏற்பட்ட நெருக்கடியைத் தளர்த்தவும், அமைதியை நிலைநாட்டவும் இந்திய அமைதிப் படையினர் ஊரடங்கை இன்று அமுல் செய்தனர்.

நண்பகல் பன்னிரண்டு மணியுடன் ஊரடங்கு நீக்கப்பட்டதாயினும் பதற்றம் தொடர்ந்து நீடிக்கிறது. மக்கள் பீதியுடன் இருக்கிறார்கள். எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்று தெரியாத நெருக்கடி நிலை மேலிட்டு நிற்பதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை, கல்முனைப் பகுதியில் உள்ள சென்றல் காம்ப் பொலீஸ் நிலையப் பக்கமாக வந்த ஆயுதம் தரித்த இளைஞர் கோஷ்டி ஒன்றைப் பொலீஸார் சுற்றிவளைத்துப் பிடித்தனர். இளைஞர் கோஷ்டியினர் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்திய அமைதிப் படையினர் பொலீஸ் நிலையம் சென்று இளைஞர் கோஷ்டியை மீட்டு வந்தனர்.

அன்று மாலையில், கல்முனையில் வைத்து இரண்டு பொலீஸ்காரர்கள் கடத்தப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் தப்பி ஓடியதாகச் சொல்லப்படுகிறது.

அடுத்தவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கல்முனை மயானத்துக்கு அருகே நேற்று (ஞாயிறு) மாலை மீட்கப்பட்டது.

இதன் பின்னர், இன்று காலையிலிருந்து பொலீஸார் கல்முனைப் பகுதியின் பல இடங்களிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் பெரும் பதற்ற நிலை உருவானது.

துப்பாக்கிப் பிரயோகம் நடந்த இடம் ஒன்றுக்குச் சென்ற இந்திய அமைதிப் படையினர் மேல் நோக்கிச் சுட்டு பொலீஸாரைக் கட்டுப்படுத்தி, பொலீஸ் நிலையத்திற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இரு ஜீ.சி.ஈ பரீட்சைகளும் ஒத்தி வைக்கப்பட்டன

ஜீ.சி.ஈ. சாதாரண பத்திரப் பரீட்சையும் உயர்தரப் பரீட்சையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இத்தகவலை கல்வி அமைச்சர் டபிள்யு. ஜே. எம். லொக்குபண்டார நேற்று முன்தினம் வெளியிட்டார்.

பாடசாலைகளில் வகுப்புக்களை எதிர்பார்த்தபடி நடத்த முடியாமற் போனதாலேயே, மனமில்லாமல் இந்த முடிவைத் தான் எடுக்க நேர்ந்ததாகவும் அமைச்சர் சொன்னார்.

இந்தப் பரீட்சைகளுக்கான புதிய திகதிகள் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் அமைச்சர் சொன்னார் (உ-எ)

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு; 14ல் வர்த்தமானி அறிவிப்பு!

கொழும்பு, ஜூலை 10

25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரும் வர்த்தமானி அறிவித்தல் வருகிற வெள்ளிக்கிழமை (14ஆம் திகதி) வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி ஆகஸ்ட் 8ஆம் திகதி என்று கல்விச் சேவைகள் ஆணைக்குழுத் தலைவர் ஜோர்ஜ் மென்டிஸ் தெரிவித்தார்.

18—35 வயதுக்கு இடைப்பட்ட வயதுடைய ஜீ.சி.ஈ.

(8ஆம் பக்கம் பார்க்க)

## 'சார்க்' பகிஷ்கரிப்பு: இலங்கையின் நிலை உறுதி

கொழும்பு, ஜூலை 10

சார்க் வெளியுறவு அமைச்சர்கள் மட்ட மாநாட்டை பகிஷ்கரிப்பதில் இலங்கை உறுதியாக இருக்கிறது என்று சிரேஷ்ட அரசுப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பகிஷ்கரிப்பைக் கைவிடும்படி பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் விடுத்த கோரிக்கைகளை இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரியவருகிறது.

பங்களாதேஷ் ஜனாதிபதி எர்சாத்தின் விசேட தூதராக வெளியுறவு அமைச்சர் அனிசுல் இஸ்லாம் மஹ்முத் கொழும்பில் பேச்சுக்கள் நடத்தியிருந்தார்.

இதேவேளை சார்க் அமைப்பு செயலாளர்நாயகம் அபுல் அஹ்சன் வருகிற 18 ஆம் திகதி கொழும்பு வருகிறார்.

## "பொதுமுன்னணி" எதிரணிகள் ஒன்றிணைந்து!

எதிர்க்கட்சிகளைக் கொண்ட 'பொது முன்னணி' ஒன்றை அமைக்கும் முயற்சி வெற்றி அளித்திருப்பதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

சுதந்திரக் கட்சி, ஐக்கிய சோஷலிச முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியன இந்த முன்னணியில் இடம்பெற்றுள்ளன.

இம் முன்னணியில் இணையுமாறு மக்கள் விடுதலை முன்னணிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதாக நவசமசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் விக்ரமபாகு கருணாரத்தின சொன்னார். (உ-எ)

## நடிகமணி வைரமுத்து கொழும்பில் காலமானார்

யாழ்ப்பாணம், ஜூலை 10

நடிகமணி வி. வி. வைரமுத்து தன் 65 ஆவது வயதில் கொழும்பில் சனிக்கிழமை காலமானார்.

கொழும்பில் வானொலி நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த சமயம் கொழும்பில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு நேற்று மரணமானார்.

ஆர்மோனியக் கலைஞராக தன் வாழ்க்கையை ஆரம்பித்த இவர் பின்பு கலைஞராகவும் நாடக தயாரிப்பு நெறிப்படுத்தல், மேடையேற்றல் ஆகியவற்றில் சிறந்த கலைஞராகவும் செயலாற்றினார்.

இவரின் அரிச்சந்திர மயான காண்டம் என்னும் நாடகம் 2 ஆயிரம் தடவைகளுக்கு மேலாக மேடையேற்றப்பட்டது.

இவரின் நாடகங்கள் தொலைக்காட்சியிலும் வானொலியிலும் பல தடவைகள் மேடையேற்றப்பட்டன.

நாட்டுக் கூத்து பரம்பரையைக் கட்டிக்காத்து வந்த நடிகமணி சிறந்த பாடகரும் அண்ணாவியாரும் ஆவார். (ஒ 3)

## பதவியேற்கவிருக்கும் ஈரோஸ் எம். பிக்கள்

கொழும்பு, ஜூலை 10

பதவியேற்கவிருக்கும் ஈரோஸ் எம். பி. க்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது:

நேற்று முன்தினம் கொழும்பில் ஈரோஸ் பிரமுகர் சங்கர் ராஜி பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்: அப்போது இத் தகவல் வெளியிடப்பட்டது.

21ஆம் திகதி பதவி ஏற்கவிருக்கும் ஈரோஸ் எம். பி.க்களின் பெயர்களும் வெளியிடப்பட்டது

மலையகம், வன்னி ஆகிய பகுதிகளுக்கான எம். பி, களின் பெயர்கள் இன்னும் தீமானிக்கப்படவில்லை;

வெளியிடப்பட்ட 11 எம். பி.க்களின் பெயர் விபரம் வருமாறு:

திரு. இரத்தினசபாபதி, தி. ?. பரராஜசிங்கம், திரு. ஸ். எட்வேர், திரு. டி. புவனசுந்தரராஜா, திரு கே. செல்வநாயகம், திரு ஸ். சிவமகராஜா, திரு. அ. குணசீலன், ஜனாப் எஸ் பஷீர். திரு. எஸ். இரத்தினராஜா: திரு கெ. சௌ தரராஜன், ஜனாப் ஏ. பி அ ன்.

திரு: ச க ராஜி பத்திரிகையாளர்மாநாட்டில் சொன்னதாவது:

ஈழவர் ஜனநாயகமுன்னணியின் பொதுச்சபையில் நாம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பார்கள். இப்ப இடையிலை இருக்கும் வானத்திலையும் நடக்கின்றன பாருங்களேன்!

## சகோதரியைக் காக்க முனைந்த இளைஞன் மரணம்! அறுந்த மின்கம்பியால் வந்தவினை!!

மின்கம்பியில் சிக்கிய சகோதரியைக் காக்க முயன்ற சகோதரர் தன் உயிரை ஈந்தார்.

இச் சம்பவம் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

சனிக்கிழமை இரவு பெய்த மழையினால் அப் பகுதியில் உள்ள மின்கம்பி அறுந்து விழுந்தது. நேற்றுக்காலை மாரிமுத்து ஜெயலட்சுமி என்னும் இளம் பெண்பக்கத்து வீட்டில் படம் பார்ப்பதற்காக இக் கம்பி கிடந்த இடத்தால் சென்றார்.

அப் பெண் அறுந்த மின்கம்பியில் சிக்கி அவலக்குரல் எழுப்பவே அப்பெண்ணின் சகோதரன் மாரிமுத்து விஜயகுமார் (வயது 18) மதில் ஏறி விழுந்து மின்வயரில் இருந்து தங்கையைக் காப்பாற்ற முனைந்த போது அவர் மின்கம்பியில் சிக்கி சவ்விடத்திலேயே துடிதுடித்து மரணமானார். தங்கை தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

இளைஞரின் சடலம் யாழ்போதனா வைத்தியசாலையில் மரண விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## அனைத்து இயக்கங்களுக்கும் ஈ.என்.டி.எல்.எவ். அழைப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 10

"எமது தமிழ் இனத்திற்கு கிடைத்திருக்கும் கடைசி சந்தர்ப்பம் இதுவாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் அனைத்து இயக்கங்களும் ஒன்றிணைந்தால் எதிர்காலத்தில் எமது மக்களை எதிரியிடமிருந்து பாதுகாக்கும் பொறுப்பினை நாமே உறுதி செய்யலாம், எமது இயக்கங்களின் ஒற்றுமையை நீண்டகாலமாக மக்கள் எதிர்பார்க்கின்றனர்."

ஈ. என். டி. எல். எப். இயக்கத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் திரு. ஞா: ஞானசேகரம் விடுத்த அறிக்கையில் இப்படி அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது'

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

தமிழ் இனத்தை கடந்த 40 ஆண்டு காலமாக சிங்கள அரசு ஏமாற்றி வதைதை உலகம் முழுததும் நன்கறியும். அத்துடன் நின்றுவிடவில்லை. தமிழ் இனத்தையே முற்றாக அழித்துவிட திட்டமிட்டு செயற்பட்டது.

அதனால்தான் நாம் ஆயுதம் ஏந்திப் போராடப் புறப்பட்டோம். இன்று அவர்கள் தமிழ் மக்களை மட்டும் ஏமாற்றவில்லை; இந்தியாவையும் சேர்த்து ஏமாற்றும் நோக்குடன் செயல்படத் தொடங்கிவிட்டனர்.

தமிழ் இனத்திற்குப் பாதுகாப்பு தமிழ் மக்களாலேயே ஏற்படவேண்டுமே தவிர சிங்கள அரசினால் அல்ல. வரும் ஜூலை 29 ஆம் திகதிக்குள் ஈழத் தமிழ் இனம் ஓர் இறுதியான முடிவுக்கு வர வேண்டியுள்ளது.

நீங்கள் எதிர்பார்த்தது அதிகாரம் என்றால் அதனை யாருக்கும் கொடுக்கமாட்டோம் என்று நாம் கூறியதே கிடையாது. ஜனநாயக ரீதியாக தேர்தல் மூலம் மக்களுக்கு முன் வந்து உங்கள் அதிகா

(8 ஆம் பக்கம் பார்க்க)

**சுபநேரம்**

10—07—1989

ஆனி — 26 திங்கட்கிழமை

நக்ஷத்திரம்: அத்தம்

சுபநேரம்:

11 58 முதல் 01.28 வரை

ராகுகாலம்:

07.28 முதல் 08.58 வரை

## வானத்தில் நடந்த திருமணம்!

ஜெனிவா, ஜூலை 9

திருமணங்கள் ஆலயங்கள், தேவாலயங்கள் வீடுகளில் கட்டப்பட்ட மணவறைகளில் நடத்தப்படுவது வழக்கம்.

ஆனால் வானத்தில், வெளியில், அந்தரத்திலும் ஒரு விநோதத் திருமணம் நடைபெறுகிறது!

இந்த விநோதத் திருமணம் சுவிற்சர்லாந்தில், பென்னி நகரில் நடைபெற்றது.

விமானத்தில் பயணம் செய்து ஆகாயத்தில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மனோன்மணி அம்பாளுக்கு கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

சங்கானை அருள்மிகுகூடத்து ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம்

(3ஆம் பக்கத்தில் சிறப்பு மலர்)

இன்று காலை நடைபெறுகிறது:

காலை 9 மணி முதல் 10-30 மணிவரை மகா கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறும்.

சைவப் பெரியார்களின் ஆசியுரை, விசேட நாதஸ்வர இசை என்பன சிறப்பம்சங்களாக இடம்பெறும்.

## ஸ்டெபிகிராப் சாம்பியன்

லண்டன், ஜூலை 10

விம்பிள்டன் டென்னிஸ் பந்தயத்தில் மகளிர் ஒற்றையர் சாம்பியன் பட்டத்தை மேற்கு ஜர்மனியைச் சேர்ந்த ஸ்டெபிகிராப் வென்று விட்டார்.

இவர், மார்ட்டினா நவரத்திலோவாவை 6-2, 6-7, 6-1 என்ற கணக்கில் தோற்கடித்தார். (ஒ-எ)

## றெனிக்கு அழைப்பாணை; இன்டர்போலின் உதவியை இலங்கை நாடியுள்ளது

கொழும்பு, ஜூலை 10

முன்னாள் நிதி அமைச்சர் றெனி டி மெல்லிடம் நீதிமன்ற அழைப்பாணையைச் சேர்ப்பிக்க குற்றவியல் விசாரணைத் திணைக்களம் இன்டர்போலின் உதவியை நாடியிருக்கிறது:

நிதி அமைச்சராக இருந்த சமயம் நம்பிக்கை மோசடியில் ஈடுபட்டதாக திரு. றெனி டி மெல் மீது மேல் நீதிமன்றத்தில் குற்றஞ் சுமத்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

இன்டர்போல் மூலம் அழைப்பாணையைச் சேர்ப்பிக்க முடியாது போய்விட்டால் ஸ்கொட்லாந்து யார்ட் பொலீஸாரின் உதவி நாடப்படும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு. றெனி டி மெல் தனது இளையமகள் ரேணுகாவுடன் இங்கிலாந்தில் வசித்து வருகிறார்.

இதேவேளை திரு. டி மெல் சொந்த விருப்பத்தின் பேரில் லங்கை திரும்பவிருப்பதாக

8 ஆம் பக்கம் பார்க்க)

## பங்களாதேஷ் அமைச்சர் கொழும்பில்

கொழும்பு, ஜூலை 10

பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் அனிசுல் மஹ்முத் நேற்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேசினார்.

இப் பேச்சின் போது இந்திய அமைதிப் படை விவகாரம் குறித்து ஆராயப்பட்டிருக்கலாம் என அவதானிகள் கருதினர். (அ)

### இன்று முதல் அரச ஊழியர்

## வேலைக்கு வராவிட்டால் சம்பளம் கிடையாது

கொழும்பு, ஜூலை 10

இன்று முதல் வேலைக்குத் திரும்பாத அரசு, கூட்டுத் தாபன ஊழியர்கள் அனைவரும் சம்பளமற்ற விடுமுறையில் இருப்பவர்களாகக் கருதப்படுவர்.

-இப்படி அமைச்சர் யு. பி. விஜேக்கூன் நேற்றுத் தெரிவித்தார்.

வேலைக்குச் சமுகமளிக்கும் ஊழியர்கள், சமுகமளிக்காத ஊழியர் பற்றிய விவரங்களை ஒவ்வொரு திங்கட்கிழமையும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கும்படியும் சகல திணைக்களங்களையும் அமைச்சர் கேட்டிருக்கிறார். (உ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள சிசிர்டீப்(f)பிரீசர் மற்றும் குளிர்சாதனப்பெட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- யுனிச்சர்விசஸ் என்ஜினியர்ஸ் ஸ்ரேசன் சந்திக்கு அருகாமை இல: 19, ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (11493)

புதிய ஷோக்கேஸ் (Show case) ஒரு பாவித்த டீப் பிறிசர் (Deepfreezer) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 237, மின் சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (1065)

பொமனேரியன் பூச்சி மருந்து கொடுபட்ட நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: விலாசம் 16/2. சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம். (1077)

பாவித்த மேசைகள், கதிரைகள், சைக்கிள்கள் மின்விசிறிகள், T. V. வேறு சகல வீட்டு தளபாடங்களும் உடன் விற்பனைக்கு உண்டு. செல்லகண்டு, 27/14, துரையப்பா ஒழுங்கை, ஈச்சமோட்டை, கண்டுக்குளி. பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் 1 மணி வரை. (1076)

நல்ல நிலையில் உள்ள Vespa Scooter150 + தொடர் இல, 82 Sri 2136 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ துரைசாமி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (11480)

17½ தும்புக் கரணடி இணைப்படகு (சிகோர் தயாரிப்பு வெளி இணைப்பு யந்திரம் வலைகள் எல்லாம் செற்றாக விற்பனைக்கு உண்டு ஐயனார் கோயிலடி, விமாவில் காரைநகர். (1 67

### Wanted Bride
### மணமகள் தேவை

Hindu Weelala parents seek very pleasing personality Bride for their elder son (age 28) performing executive standard career in Jaffna Apply 560, C/o Uthayan Jaffna with Horoscope & photo which will be sent back. (1078)

### வாடகைக்கு

மாடிவீடு வாடகைக்கு விடப்படும் 52A கல்லூரிவீதி நீராவியடி, யாழ்ப்பாணம். [1079]

### ஆங்கிலப் புத்தகம்

அடிப்படையிலிருந்து G.C.E. (O/L) வரை எழுத்து இலக்கணம், பேச்சுப் பயிற்சி முதலியவற்றை உள்ளடக்கிய மிகச் சிறந்த ஆங்கிலப் புத்தகம் Basic Grammar and Spoken Practical கேட்டு வாங்குங்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (11477)

### கோழிக் குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் பேடுச குஞ்சு, சேவல் குஞ்சு. (Cobb புறொயிலர் குஞ்சு (12.07 89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க இல. 9, கந்தையா வேலன், சுன்னாகம். புகையிரத நிலையத்துக்கு அருகில்) (1064)

### விற்பனைக்கு

கிளிநொச்சியில் கரடிப்போக்குச் சந்திக்கருகில் ''பராசக்தி'' தியேட்டரும் அதன் பின்னால் உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி ந புவனஸ்வரி, ஊரெழு கிழக்கு, சுன்னாகம். (1446)


## கடைகள் திறக்கப்பட்டன

யாழ்ப்பாணம் ஜூலை 10

ஒரு மாதத்துக்கு மேலாகப் பூட்டப்பட்டிருந்த நெல்லியடிப் பகுதிகளின் கடைகள் சில மீண்டும்திறக்கப்பட்டன. (இ-9)

# விசேஷ வாகனங்கள் மூலம் 332 தபால் பொதிகள்

## வெள்ளியன்று கொழும்பிலிருந்து வவுனியா வந்து சேர்ந்தன

வவுனியா, ஜூலை 10

வெள்ளியன்று கொழும்பில் இருந்து விசேஷ வாகனங்கள் மூலம் 332 தபால் பொதிகள் வவுனியாவுக்கு எடுத்து வரப்பட்டன.

இவற்றில் 230 தபால்பொதிகள் மாங்குளம், கிளிநொச்சி முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்டங்களுக்கும் எஞ்சிய 102 பொதிகளில் ஒரு பகுதி பன்னாருக்கும் இ. போ. ச. பஸ்கள் மூலமாக சனியன்று அனுப்பப்பட்டன.

இதனிடையில் எரிபொருள் உணவுப் பொருள்கள் என்பனவற்றை ஏற்றிக் கொண்டு இரண்டு சரக்கு ரயில்கள் யாழ்ப்பாணத்துக்குச் சென்றன.

முதல் ரயிலில் ஒரு வகன் சீனி, ஒரு வகன் பருப்பு ஆறு வகன் எரிபொருள் 14 வகன மா என்பன எடுத்துச் செல்லப்பட்டன.

இரண்டாவது ரயிலில் 89½ மெட்ரிக் தொன் மா 2 வகன்களில் வவுனியாவுக்கு எடுத்து வரப்பட்டது.

மாங்குளத்துக்கு இரண்டு வகன் மா ஒரு வகன் எரிபொருள் என்பனவும்— யாழ்ப்பாணத்துக்கு இரண்டு வகன் மா 9 வகன்களில் எரிபொருள் என்பனவும் எடுத்துச் செல்லப்பட்டன.

கடந்த 20 ஆம் திகதி திருகோணமலை சீனக்குடாவில் இருந்து புறப்பட்ட இந்த வகன்கள் அனுராதபுரத்தில் தேங்கிக்கிடந்து கடந்த சனிக்கிழமைதான் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (இ 164)

## தொண்டர் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 10

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வருடாந்த உற்சவங்களை முன்னிட்டு முக்கிய தினங்களில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன இளைஞர் மன்ற தொண்டர்கள் சேவையாற்றவுள்ளார்கள்.

தொண்டர்கள் உள்வீதி சேவைகளுடன் உடமைகள் பாதுகாப்பு, சைவசமய நூல் விற்பனை போன்ற சேவைகளில் ஈடுபடுவார்கள்.

இச் சேவைகளுக்கு வேண்டிய ஒழுங்குகளைத் தொண்டர் அமைப்பாளர் திரு .சுவமிநாதன் மேற்கொண்டுள்ளார். [ச]

### கோப்பாய் பகுதியில்

# அடிக்கடி மின்தடை; தொழிற்சாலைகள் பாதிப்பு

கோப்பாய், ஜூலை 10

நீர்வேலிப் பகுதியில் அடிக்கடி ஏற்படும் மின்தடையினால் இப்பகுதியிலுள்ள தொழிற்சாலைகள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சுமார் 400 தொழிலாளர்கள் வேலை இழக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதாக இப்பகுதியில் இயங்கும் தொழிற்சாலை நிர்வாகி ஒருவர் கருத்து தெரிவித்தார்.

தற்போது எரிபொருள் பற்றாக்குறை நிலவுகிறது. இவ்வேளையில் மின்தடை ஏற்பட்டு எரிபொருளைக் கொண்டு இயந்திரங்களை இயக்கும் நிலை உருவானால் பொருளின் உற்பத்திச் செலவு அதிகளவில் உயரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-வ)

### தனியார் வர்த்தக நிலையங்கள்

# மேலதிக வேலைக்கு மேலதிக ஊதியம் வழங்க வேண்டும்

## வர்த்தக ஊழியர் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாணத்தில் தனியார் ஊழியர்கள் வர்த்தக நிலையங்களில் தற்சமயம் எட்டு மணித்தியாலத்திலும் கூடுதல் நேரம் வேலை செய்து வருகிறார்கள். எட்டு மணித்தியாலயத்துக்கு மேல் வேலை செய்தால் அவர்களுக்கு அதற்கு மேலதிக ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

இப்படியான தீர்மானம் ஒன்றை யாழ்ப்பாணம் வர்த்தக ஊழியர் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டத்துக்கு ஈழத் தொழிற் சங்க சம்மேளனத் தலைவர் திரு அ. இராஜலிங்கம் தலைமைவகித்து ஊழியர் பிரச்சினைகள் பற்றியும், அவர்கள் விடயத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விளக்கமளித்தார்.

தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

★ ஆறுமாதத்துக்கு மேல் வேலை செய்த சகல ஊழியர்களையும் நிரந்தரமாக்க வேண்டும்.

★ ஒரு தொழிலாளிக்கு ஆகக் குறைந்தது மாதச் சம்பளம் 1500 ரூபாவாக இருக்க வேண்டும்.

★ விபத்து நிதி, சேமலாப நிதி என்பவற்றை ஊழியர்களுக்கு வழங்க வேண்டும்.

சங்கத்தின் அமைப்பாளராகவும் பொறுப்பாளராகவும் திரு. ப. ரகு தலைவராக எஸ். தியாகராசா, உப - தலைவராக திரு. எஸ். சற்குணராசா, செயலாளராக திரு. அ இராஜலிங்கம், உப - செயலாளராக திரு வி. சந்திரகுமார், பொருளாளராக திரு. கே. குணபாலசிங்கம், நிர்வாக அமைப்பாளராக திரு .எஸ். சக்திசற்குணம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3)

# சிறந்த அதிபர்களை நாம் பாராட்டாதிருக்க முடியாது

## அதிபர்கள் கருத்தரங்கில் உரை

மானிப்பாய், ஜூலை 10

''அதிகாரிகள் இல்லாமல் பாடசாலைகள் இயங்க முடியும் ஆனால் அதிபர்கள் இல்லாமல் பாடசாலைகள் இயங்க முடியாது. பலவேறு பிரச்சினைகள், கஷ்டங்கள் மத்தியிலும் பாடசாலைகளை நல்ல முறையில் நடத்திச் சிறப்பாக கடமையாற்றும் அதிபர்களை பாராட்டாமல் விடமுடியாது.''

மருதனாமட கோட்டத்துக்குரிய மகாத்தணி அதிபர்கள், பாடசாலை அதிபர்கள் கருத்தரங்கில் உரையாற்றிய பாது மருதனாமடம் கோட்டக்கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரன் இவ்வாறு கூறினார்.

மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் பாடசாலையை முகாமைத்துவம் செய்தல் பற்றி கல்வி நிர்வாகத்துக்கு பொறுப்பான கல்வி அதிகாரி திரு. பொ. சிவகுருநாதன் கருத்துரை வழங்கினார்.

கல்வி அதிகாரி திரு. சு சிவநாயகமூர்த்தி பாடசாலை மேற்பார்வை பற்றி கருத்துரை வழங்குகையில் கூறியதாவது;

கல்வித்திணைக்கள அதிகாரிகள் பாடசாலைகளை மேற்பார்வை செய்ய வரும்போது அதிபர் ஆசிரியர்களிடையே பய உணர்வு இருக்கக்கூடாது.

தமக்கு அவர்கள் ஆலோசனை வழங்க வருவதாகவே கருதவேண்டும்.

பிழை பிடிக்க வேண்டும் என்ற நோக்கம் அதிகாரிகளுக்கும். பிழை பிடிப்பதற்காகவே வருகிறார்கள் என்ற எண்ணம் ஆசிரியர்களுக்கும் இருக்கக்கூடாது.

அதிபர்கள் புள்ளி விவரம் கணக்கெடுப்பு படிவங்களை நிரப்புவதுடன் நின்றுவிடாது வகுப்புக்களில் கற்பித்தல், பெற்றோர்—ஆசிரிய தொடர்பை ஏற்படுத்தல், பாடசாலைகளில் கற்பித்தலுக்கு புறம்பான நிகழ்ச்சிகளை நடத்துதல் போன்ற பணிகளிலும் ஈடுபடவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களகணக்காளர் திரு. ஆர். சுகுணதீரன் மதிய உணவுத் திட்டக்கணக்கு வைத்தல், ஆசிரியர்கள் லீவுகள் பற்றிய விளக்கம் அளித்தார்.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள வர்த்தக பாடக்கல்வி அதிகாரி திரு. எஸ் சிவராசா, மருதனாமடம் கோட்டத்தின் திட்டமிடல் கல்வி அதிகாரி திருமதி ஏ. துரைசிங்கம், பணையியல் பாடக்கல்வி அதிகாரி திருமதி ஆர். சண்முகரட்ணம், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ பஞ்சலிங்கம் ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள் (ச-90)

# கைதடி நவீல்ட் பாடசாலை

## சாரணர் குழுவுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 10

''கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவரும் நாற்பது சாரணக் குழுக்களில் கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் சாரணக்குழுவும் திறம்பட இயங்கிவருவது சாரணர் இயக்கத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

சென்ற ஆண்டு சாரணர் தேசிய வாரத்தில் கிளிநொச்சி மாவட்டத்துக்கு அகில இலங்கையிலும் முதலிடம் கிடைத்தமை பாராட்டற்குரியது

இந் நிலை நீடிக்க நாம் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும்.''

கைதடி நவீல்ட் பாடசாலை சாரணரின் பயிற்சிப் பாசறையை கிளிநெச்சி மாவட்ட ஆணையாளர் திரு. க. கோபாலகிருஷ்ணன் திறந்துவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

மாவட்ட ஆணையாளரைப் பாடசாலை அதிபர் திரு. ஜே எஸ். டேவிட்டும் சாரணாசிரியர் திரு எஸ் சிவானந்தராஜாவும் வரவேற்றனர்.

நவீல்ட பாடசாலை சாரணக் குழுவைச்சேர்ந்த 26 சாரணர்கள் இப பாசறையில் பங்கு கொண்டனர்

இரவு பாசறைத் தீ நிகழ்ச்சியும் நடைபெற்றது. [illegible]

## வவுனியாவில் ஊழியர் பற்றாக்குறை

வவுனியா, ஜூலை 10

வவுனியா நகர்ப்பகுதியிலும் புறநகர்ப் பகுதியிலும் உள்ள கடைகள். தேநீர்க் கடைகள் மற்றும் அலுவலகங்கள் பலவற்றிலும் ஊழியர் பற்றாக்குறை பெருமளவில் நிலவுகின்றது

இதனால் கடைகளை, அலுவலகங்களை நடத்துவதில் பெரும் சிரமங்களையும்: கஷ்டங்களையும் எதிர்நோக்கியுள்ளதாகப் பலரும் தெரிவிக்கின்றனர். (இ-164)

## ஆசிரியர் நியமனம் பற்றி கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

பயிலுநர் ஆசிரியர்களாக 25 ஆயிரம் பேரை நியமிப்பது சம்பந்தமாக விசேட கூட்டம் ஒன்று இன்று 10 ஆம் திகதி கொழும்பில் நடைபெற இருக்கிறது. (இ-3)

## பாழடையும் கோயில்

சேமமடு, ஜூலை 10

பெரிய தம்பனையின் பிரசித்தி பெற்ற வரசித்திவிநாயகர் ஆலயம் பாழடையும் நிலையில உள்ளது.

பிரஸ்தாப கோயில் 1986 ஆம் ஆண்டு நடைபெற்ற வன்செயலின் போது பாதிக்கப்பட்டது. கோயிலின் விக்கிரகமும் பெயர்க்கப்பட்டு தங்கத்தகடுகளும் திருட்டுப் போய் உள்ளன.

இக்கோயிலைப் புனரமைத்துச் செய்து தரும்படி இவ்வூர் மக்கள் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். (இ-ரி)

# இலங்கையின் பழவகை ஏற்றுமதி

கொழும்பு ஜூலை 10

காய்கறிவகைகள் பழவகைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ் போன்ற நாடுகளுடன் இலங்கையும் போட்டியாக காய்கறி பழவகைகளை ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ளது.

இலங்கையிலிருந்து 18 பழவகைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பழவகைகளில் மா, அன்னாசி முதலிடத்தை வகிக்கின்றன. அத்துடன் காய்கறி பழவகை ஏற்றுமதியில் இலங்கை மூன்றாவது இடத்தை வகிக்கின்றது. (ச)

## ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் விசாரணையில்

சேமமடு, ஜூலை 10

சமீபத்தில் நடைபெற்ற தேடுதல்களின் போது நெடுங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் மூவர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். (இ-ரி)

### "மாகாண அரசு" விவகாரம்:

# ஆலோசனை வழங்கலாம் உத்தரவிட முடியாதாம்

கொழும்பு, ஜூலை 10

அரசாங்கம் என்ற வார்த்தையை பாவிக்க வேண்டாம் என்று வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு உத்தரவிடும் நிலையில் நான் இல்லை.

பொது நிர்வாகம், உள்துறை மற்றும் மாகாணசபை அமைச்சர் யு. பி. விஜேக்கூன் நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'அரசாங்கம் என்ற சொல்லைப் பாவிக்க வேண்டாம் என்று என்னால் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு ஆலோசனை மட்டுமே கூற முடியும். அந்த ஆலோசனையைச் சென்ற ஏப்ரல் 3 ஆம் திகதி கூறினேன்—' என்று அமைச்சர் மேலும் சொன்னார்.

சுதந்திரக்கட்சி எம். பி றிச்சர்ட் பத்திரான:-

வடக்கு - கிழக்கு மாகாண சபை, பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் அறிக்கைகளை 'வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்கம் என்றே வெளியிட்டு வருகிறது.

அமைச்சர் என்ற முறையில் உங்களால் இதை நிறுத்தும்படி உத்தரவிட முடியாதா?

அமைச்சர்:-

அப்படியாக நான் உத்தரவிட முடியாது.

திரு. பதிரான:-

மாகாண சபை அமைச்சர் என்ற முறையில் நீங்கள் உத்தரவிட முடியும் அல்லவா!

அமைச்சர்:-

என்னால் ஆலோசனை மட்டும் தான் கொடுக்க முடியும். உத்தரவிட முடியாது என்று சொன்னது புரியவில்லையா! (இ-எ)

### மட்டக்களப்பு

# கூடைப்பந்தாட்ட வீரர் இருவர் கடலுக்குப் பலி

கொழும்பு, ஜூலை 10

தெகிவளை அல்பேட் பிளேஸ் கடற்கரையில் குளித்துக் கொண்டிருந்த மட்டக்களப்பு சென்மைக்கல்ஸ் கூடைப் பந்தாட்ட அணி வீரர்கள் இருவர் நீரில் மூழ்கி மரணமானார்கள்

ஜூட் நடசிவாயம் நிரஞ்சன் குமாரசுவாமி ஆகியோரே இவ்வாறு மரணமானவர்களாவர்.

இவர்கள் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற 22 வயதுக்குட்பட்டவர்களுக்கான அகில இலங்கைக் கூடைப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியில் அகில இலங்கை சம்பியன்பட்டத்தை சென் மைக்கல்ஸ் அணி பெற்றது.

மரணமடைந்த வீரர்களின் சடலங்களை மட்டக்களப்பிற்கு எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை பொலிஸ் சுப்பிரின்டன் ஐ ரி கனகரட்ணம் மேற்கொண்டிருந்தார். (இ-6)

# சேவையில் திருப்தி கண்டு பணி ஆற்ற வேண்டும்

## பிரிவுபசார வைபவத்தில் உரை

தபால்சேவகர்கள், ஊழியர்களின் பணி இன்று சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கின்றது எனவே சேவையில் பூரண திருப்தி கண்டு பணியாற்ற வேண்டும்.

சாவகச்சேரி பிரதம தபாலதிபர் திரு. ரீ. தியாகராஜா மேற்கண்டவாறு கூறினார்.

நிந்தவூர் பிரதம தபாலதிபராகப் பலவருடங்கள் கடமையாற்றி, அண்மையில் சாவகச்சேரி பிரதம தபாலதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. தியாகராஜாவுக்கு நிந்தவூர் பிரதம தபாலகத்தில் பிரிவுபசார வைபவம் ஒன்று நடத்தப்பட்டது

வைபவத்தில் நன்றி தெரிவித்துஉரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உதவி தபாலதிபர் ஜனாப். ஐ. எல். அஷ்ரப் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

தபாலதிபர் திரு. தியாகராஜா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

'தபால் திணைக்கள ஊழியர்கள் தமது கடமையை உணர்ந்தும் உண்மையான சேவை மனப்பாங்குடன் பணிபுரிய வேண்டும்.

குறிப்பாக தபால் சேவகர்கள் தமது கடமையில் அசமந்தமாக செயல்பட்டால் மக்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுவதுடன் தபால் திணைக்களத்திற்கும் அவப் பெயரே ஏற்படும்.

சமுதாயத்தில் இன்று தனி இடம் பெற்றுத்திகழும் தபால் சேவகர்கள் பொது மக்களின் நல்லபிப்பிராயங்களைப் பெறத்தக்கதாக தமது கடமையில் உண்மை, நேர்மையைக்கடைப்பிடிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். (இ-14)


உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் சுக்கில ஆண்டு ஆனித்திங்கள் 26ஆம் நாள் [10-07-89] திங்கட்கிழமை காலை 10 36 மணி தொடக்கம் 12.22 மணிவரையுள்ள
★ கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில் ★

| | |
|---|---|
| பொ. சோமசுந்தரம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் திருநிறைச் செல்வன் **அருள்தாஸ்** (இலக்ரோனிக் கணணி பொறியியல் பீடம் நோர்வே) அவர்களுக்கும் | ச. க. நடராசா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி திருநிறைச்செல்வி **இராஜேஸ்வரி** (ஆசிரியை க. உ. வி. பண்டாரிக்குளம் வவுனியா) அவர்களுக்கும் |

அரியாலை அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயத்தில் மாங்கல்யதாரணம் நடாத்த பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருவருள் பாலித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராக சமூகந்தந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறு
★ அன்புடன் அழைக்கின்றோம். ★

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்,

| | |
|---|---|
| திருமதி P. சோமசுந்தரம் [தாயார்] திரு. சோ. விமலதாஸ் [சகோதரர்] போதனாசிரியர் யா/தொழில் நுட்பக்கல்லூரி, 6, கனகரெத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். | திரு. திருமதி S. K. நடராசா தம்பதிகள் [இளைப்பாறிய P. W. D ஓவசியர்] உரிமையாளர் வன்னி அச்சகம் வவுனியா 447, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். |

(இருவீட்டார் அழைப்பு)

[சி-2749]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சங்கானை அருள்மிகு கூடத்து ஸ்ரீ மனோன்மணி அம்பாள்
# மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்


ஆதாரம் சக்தியென்றே அருமறைகள் கூறும்
யாதானுந் தொழில் புரிவோம்,
யாதுமவள் தொழிலாம்!

சங்கானை மனோன்மணி அம்பாள் ஆலய
கும்பாபிஷேகம் சிறப்புற
**வாழ்த்துகின்றோம்!**

**ந. த. இராசரத்தினம்,**
மாக்கெற்,
சங்கானை.

**என். காசிப்பிள்ளை,**
சந்தைச் சதுக்கம்,
சங்கானை.

**யோகா பிறதர்ஸ்,**
மெயின் வீதி,
சங்கானை.

**ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்,**
வல்லை வீதி,
சங்கானை.

**எஸ். ஆர். பி. ஸ்ரோர்ஸ்,**
மெயின் வீதி,
சங்கானை.

**ஆதவன் ஸ்ரோர்ஸ்,**
எஸ். ஜெயராசன்,
மெயின் வீதி, சங்கானை.

**கிருஷ்ணா தொழிற்சாலையும், பந்தல் சேவையும்,**
பிரதான வீதி, சங்கானை.

**அம்பாள் கறுஜ்,**
ரி. பரமேஸ்வரன்,
மா. நடராசா,
பிரதான வீதி, சங்கானை.

**தபால் அலுவலகம்**
தபால் அதிபரும் உத்தியோகத்தர்களும்
சங்கானை

**அரச மரக் கூட்டுத்தாபனம்**
முகாமையாளரும் ஊழியரும்
மெயின் வீதி, சங்கானை

**முத்துமாரி அம்பாள் ஸ்ரோர்ஸ்**
நா. க. சிவப்பிரகாசம்,
பிரதான வீதி, சங்கானை.


## அருள் வேண்டும் அன்பர்க்கு மருள் நீக்கும் மனோன்மணி

### சங்கானை மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை

சங்கானையிலுள்ள தொன்மையான ஆலயங்களில் அருள்மிகு கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலயமும் ஒன்றாகும். இங்குள்ள பெருமை மிகும் சக்தி வழிபாட்டுத்தல மாகவும் இந்த ஆலயமே விளங்குகின்றது. அருள்மிகு மனோன்மணி அம்பாளின் அருட்சக்தி பல ஆண்டுகளாக சிறியதோர் ஆலயத்திலேயே பிரவாகித்தது. சங்கானை வாழ் இந்து இளைஞர்களின் முயற்சியும் ஆலய நிர்வாகிகளின் அனுசரணையும் இணைந்து 1971 இல் இந்த ஆலயத்திற்கு ஓர் திருப்பணிச் சபையைத் தோற்றுவித்தது.



ஸ்ரீ மனோன்மணி அம்பாள்

திருப்பணிச்சபையின் அருந் தொண்டுகளாலும் விடா முயற்சியாலும் அம்பாள் அடியார்களின் ஒத்துழைப்பினுலும் கற்றிருப்பணி ஆலயமாகி, மகா கும்பாபிஷேகம் 1973 பெப்ரவரி ஒன்பதாம் திகதி அமரர் சிவஸ்ரீ வை. மு. குமாரசாமி சிவாசாரியார் தலைமையில் நிறைவுற்றது. திருப்பணிச் சபையின் தொடர்ச்சியரன தொண்டுகளால் வசந்தமண்டபத் திருப்பணியும் விரைவாக நிறைவேறிப் புதுப்பொலிவு பெற்ற சக்திப்பீடமாகியது. அம்பாள் அடியார்களின் நல்வரவுகள் பெருகியதல் ஆலய வளர்ச்சியிலும் பொலிவு ஏற்பட்டுவருகிறது.

இன்றைய திருப்பணிச் சபையினர் பிள்ளையார், முருகன், சண்டிகேஸ்வரி ஆகிய மூர்த்திகளுக்குத் தனித்தனி ஆலயங்கள் அமைத்துள்ளனர். அன்னை அம்பாளுக்கும் ஆலயப் பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெற அன்னை அருள் கைகூடியுள்ளது. அடியார்களின் மனமுவந்த காணிக்கையாகப் புதியதோர் திருமஞ்சமும் உருவாகியுள்ளது. அம்பாளின் திருத்தலம் மிகவும் குறுகிய காலத்தில் விரைந்துகண்ட திருப்பணிகள் பலவுக்கும் அடியார்களின் நல்லுதவிகளும் ஒத்துழைப்புக்களுமே காரணங்களாகும்.

இந்த ஆலயத்தில் நிகழ்வுறும் விசேடவிழாக்கள், கூட்டுப் பிரார்த்தனை, சொற்பொழிவுகள் யாவும் சைவ ஆலயங்களுக்கு முன்னோடியாக விளங்குகின்றன.

அண்டசராசாரங்களையும் காத்துரட்சிப்பவள் அன்னை. ஆதிபராசக்தியாகநின்று அகில மனைத்தும் அருள்புரியும் அம்பிகையாக, சிந்தித்து வந்தித்து நின்றுதினம் சேவித்து வழிபடும் அடியார்களின் இடர் நீக்கி மருள் நீக்கி இன்னருள் புரியும் அவள் இங்கே மனோன்மணியாக வீற்றிருக்கின்றாள்.

"அம்பிகையைச்
சரணடைந்தால்
அதிகவரம் பெறலாம்..."

என்னும் பாரதியின் வாக்கினுக்கு ஏற்ப நாம் அன்னையை வழிபட்டு; செல்வம், வீரம், கல்வி, சுகவாழ்வு, மனஅமைதி, வெற்றிகள் பெற்று மங்கள வாழ்வுபெற்று உய்வோமாக!

★

### நவகுண்ட மகா கும்பாபிஷேகம்

**காலம்:** இன்று, 10 - 7 - 89 திங்கட்கிழமை.
**நேரம்:** காலை 9 மணி முதல் 10.30 வரை
**போதகாசிரியர்:** மறைத்திரு அன்னைதாசன் கந்த சாம்ப சிவாச்சாரியார், நாயன்மார்கட்டு.
**பிரதிஸ்டா பிரதம குருக்கள்:** சிவாகம கிரியாரத்தினம் சிவஸ்ரீ சிவ, நித்தியானந்தக் குருக்கள், தேவஸ்தானம்.
**ஆலய நிர்மாண அமைப்பாளர்:** V. தம்பிராசா குழுவினர், அராலி.
**வர்ண அமைப்பாளர்:** விஸ்வப் பிரம ஸ்ரீ வி. கைலாசநாதன் குழுவினர், நாச்சிமார் கோவிலடி.
**ஒலி, ஒளி அமைப்புகள்:** செல்வன் S. கணேசமூர்த்தி, சங்கானை.
**ஆசியுரை வழங்குவோர்:** கலாநிதி. கா. கைலாசநாதக் குருக்கள், பேராசிரியர், பல்கலைக்கழகம் யாழ். வளாகம், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை.
**மங்கள இசை வல்லுனர்கள்:**
N. K. பத்மநாதன் குழுவினர்.
V. K. கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்கள்.
சிதம்பரநாதன் குழுவினர்.
K. சிவகுமாரன் குழுவினர். பங்குகொண்டு சிறப்பிப்பார்கள்.


**வைற் பீல்ட் இன்டஸ்றீஸ்,**
**(White Field Industries)**
வல்லை வீதி, சங்கானை.


### அம்பாளை வணங்குகிறோம்!

குறுகிய கால எல்லைக்குள் நின் திருப்பணி வேலைகளை முடிப்பதற்கு அருள் சொரிந்து புதுப் பொலிவுடன் மிளிரும் ஆலயத்துள் மீண்டும் எழுந்தருளி இன்று மகா கும்பாபிஷேகம் காணும் எம் அருமை மனோன்மணி அம்பாளை நாம் சிரந்தாழ்த்தி கைகூப்பி வணங்குகிறோம்.

பரிபாலன சபை
சங்கானை மனோன்மணி
அம்பாள் ஆலயம்


துன்பமே இயற்கை யெனும் சொல்லை மறந்திடுவோம்
இன்பமே வேண்டி நிற்போம்: யாவுமவள் தருவாள்;

சங்கானை மனோன்மணி அம்பாள் ஆலய
கும்பாபிஷேகம் சிறப்புற
**வாழ்த்துகின்றோம்!**

**மெடி பிளஸ்**
**MEDDI PLUS**
சங்கானை,
CHANKANAI.

**கா. வைத்திலிங்கம் & சன்ஸ்**
மாக்கெற், சங்கானை.

**சேக்கிள் சென்ரர்,**
மெயின் வீதி,
சங்கானை.

**ஆனந்தா அச்சகம்-புத்தகசாலை**
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**பாக்கியரெத்தினம்**
**காட்வெயர் ஸ்ரோர்ஸ்,**
பிரதான வீதி, சங்கானை.

**அருளானந்த ரெக்ஸ்ரைல்ஸ்,**
பிரதான வீதி,
சங்கானை.

**லீலா ஸ்ரோர்ஸ் &**
**லீலா பேக்ஹவுஸ்,**
மார்க்கெற், சங்கானை.

**சங்கானை**
**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
பிரதான வீதி, சங்கானை.

**எஸ். சின்னையா பத்மராசா,**
ஆபரண உற்பத்தியாளர்,
பிரதான வீதி, சங்கானை.

**எம். ஆர். எஸ்,**
மெயின் வீதி,
சங்கானை.

**மிது வீடியோ மூவிஸ்,**
மெயின் வீதி,
சங்கானை.

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்!
✶ கோயில் அபிஷேக திரவியங்கள் ✶ மருந்துகள் ✶ மருந்துச் சரக்குகள்
விற்பனையாளர்கள்: **சுந்தரம் பிரதர்ஸ்** 178, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடிக்கையாளர்களுக்கு...

உங்கள் திருப்தியே எமது சேவையாகக் கொண்டு இழ்வரும் ம்பனிகளின் அதிகாரம் பெற்ற வடமாகாண ஏக விநியோகஸ்தராக நாம் நியமிக்கப்பட்டுள்ளோம் என அறியத்தருகின்றோம்.

### நியூ பார்மெட் டிஸ்ரிபியூட்டர்


128, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

- Hemas (Drugs) Ltd.
- Warner Lambert (Pvt) Ltd.
- Mack Woods Ltd.
- Farnell Ceylon Ltd.

இத்துடன் எம்மிடம் மொத்தவிலையில் பார்மஸி, கேஜிக்கல் பொருட்களும் பெற்றுக் கொள்ளலாம்.

(சி/3026)


## 90ஆம் நாள் நினைவஞ்சலி



### சத்துரகுலசிங்கம் - சிவராசா (ஜெனு)

மலர்வு: 07 - 07 - 1968 உதிர்வு: 12 - 04 - 1989

'பெண்ணுக்காய் முடி சரிந்தோர் மாமன்னர் பலர் பொன்னுக்காய் நிலை சரிந்தோர் பல நூறு மாந்தர் நலனுக்காய் நாச் சரிந்தோர் பலகோடி மக்கள்-தமிழ் மண்ணுக்காய் உயிர் சரிந்து உயர்ந்தாயே! - ஜெனு''

- வரணி வாழ்மக்கள்

வரணி. (1175)

## 6ஆம் மாத நினைவஞ்சலி



### செல்வி ஐயாத்துரை சத்தியபாமா

அன்னையின் மடியில்:- 11-02-1962 ஆண்டவன் அடியில்:- 25-01-1989

தந்தை, தாய், சகோதரர்கள், உற்றார், உறவினர் பார்ப்பவர்கள் மகிழ்ந்திடவே சிரித்து நின்று உனது திறமையைக் காட்டிய உன்னை அவசரமாய் ஆண்டவன் ஏனம்மா அழைத்தான்.

12-7-89 புதன் கிழமை எங்கள் இல்லத்தில் நடக்க இருக்கும் எமது மகளின் அந்தியேட்டி கிரியையில் உற்றார், உறவினர், சிநேகிதர் அனைவரும் கலந்துகொள்ளும்படி அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

தாய், தகப்பன்.

வரணி மத்தி.
இடைக்குறிச்சி. (1168)

# மீன் பிடி கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவுத் திணைக்களத்தின் கீழ்!

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல மீன் பிடிக் கூட்டுறவுச் சங்கங்களும் கூட்டுறவுத் திணைக்களத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் மீன் பிடித் துறைப் பணிப்பாளர் இது சம்பந்தமான சுற்றுநிருபத்தை அனுப்பியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள மீன் பிடிக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவு வேலைகளையும், ஏனைய பார்வை வேலைகளையும் மட்டுமே கூட்டுறவுத் திணைக்களம் இதுவரை மேற்கொண்டு வந்தது. மீன் பிடி அபிவிருத்தி சம்பந்தமான வேலைகளை மீன் பிடித் திணைக்களமே மேற்கொண்டு வந்தது.

இனிமேல் கூட்டுறவுத் திணைக்களமே மீன் பிடிக் கூட்டுறவுச் சங்கங்களின் சகல வேலைகளையும் மேற்கொள்ளும்.

இது சம்பந்தமான சுற்றுநிருபம் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. [உ-3]

## விம்பிள்டன் டென்னிஸ் அரை இறுதிப் போட்டிகள்

லண்டன், ஜூலை 10

இங்கிலாந்தில் நடைபெறும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் பெண்களுக்கான ஒற்றையர் அரையிறுதி ஆட்டங்களில் வெற்றி பெற்றதன் மூலம் எட்டுவருடங்கள் விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ள அமெரிக்க வீராங்கனை மார்டினு நவட்டிலோவாவும் மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த தற்போதைய விம்பிள்டன் சாம்பியன் ஸ்டெபிகிருப்பும் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளனர்

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் அரையிறுதி ஆட்டங்களில் சுவீடன் வீரன் ஸ்டெபன் எட்பேர்க் அமெரிக்க வீரர் ஜோன் மக்கென்ரூவையும் மேற்கு ஜேர்மன் வீரர் பொறிஸ் பெக்கர் செக்கோ சிலவாக்கிய வீரர் இலான் வென்டிலேயும் தோற்கடித்ததன் மூலம் இறுதிப் போட்டியில் ஆடத் தகுதி பெற்றுள்ளனர். (க- 6)

விளையாட்டு அரங்கு

## பலாலி ஆசிரியர் கலாசாலை இல்ல விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 10

பலாலி ஆசிரியர் கலாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி கடந்த புதன்கிழமை கோப்பாய் மகா வித்தியாலய மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பலாலி ஆசிரிய கலாசாலையின் அதிபர் என். கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் 195 புள்ளிகளைப் பெற்றதன்மூலம் கந்தசாமி இல்லம் முதலிடத்தைப் பெற்றது.

இரத்தினம் இல்லம் சவரிமுத்து இல்லம் என்பன முறையே 184, 157 புள்ளிகளைப் பெற்று 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றன.

ஆண்கள் பிரிவில் மய்வல்லுனர் சம்பியன் பட்டத்தை இரத்தினம் இல்லமும் பெண்கள் பிரிவில் சவரிமுத்து இல்லமும் பெற்றுக்கொண்டன.

ஆண்களுக்கான சாம்பியன் கிண்ணத்தை இரத்தினம் இல்லத்தைச் சேர்ந்த ஏ. ஜி. ஏ. யோகராஜாவும், பெண்களுக்கான சாம்பியன் கிண்ணத்தை சவரிமுத்து இல்ல வீராங்கனை ஸ்ரீசுதர்சினியும் பெற்றுக்கொண்டனர்.

அணிநடைப் போட்டியில் சவரிமுத்து இல்லமும் முதலிடத்தைப் பெற்றது. அஞ்சலோட்டச் சம்பியன் பட்டத்தை இரத்தினம் இல்லம் தட்டிக்கொண்டது.

முன்னைநாள் பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் ஈ. கனகலிங்கம் இப்போட்டியின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். திருமதி கே. கனகலிங்கம் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கினார். ( - 6)

## இலவச பால்மா

பச்சிலைப்பள்ளி, ஜூலை 10

முகமாலைப் பகுதியிலுள்ள வறிய குடும்பங்களுக்கு கத்தோலிக்கத் திருச்சபையினால் வழங்கப்பட்ட பால்மா முகமாலை பங்குத் தந்தை அருட்திரு. பிரான்சிஸ் அடிகளார் அவர்களால் முகமாலை தேவாலயத்தில் வைத்து இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

முகமாலை, இந்திராபுரம், அம்பலாவளை, இத்தாவில், சுடலைப்பிட்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த நானூற்றுக்கு மேற்பட்ட குடும்பத்தினர் இந்த இலவச பால்மாவை பெற்றுக்கொண்டனர். (இ-117)

## முன்னாள் எம். பி. மரணமானார்

கொழும்பு, ஜூலை 10

ஹக்மனைத் தொகுதி முன்னாள் எம். பி. கேர்னல் சி. ஏ. தர்மபால கடந்த வியாழன் மரணமானார் அவருக்கு வயது 81. (இ-ஏ)

## ஒட்டுசுட்டான் வைத்தியசாலை

புதுக்குடியிருப்பு, ஜூலை10

ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் நோயாளர் தங்குமிட வசதியை ஏற்படுத்த முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இவ் வைத்தியசாலை 15 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டிருப்பதால் இதனை மிகவும் வசதியானதொரு வைத்தியசாலையாகமாற்ற முடியும் எனவும் இதன் மூலம் ஒட்டுசுட்டான் சமளங்குளம், சின்னச் சாளம்பன், பெரிய சாளம்பன், முத்தையன்கட்டு, கற்சிலைமடு, புளியங்குளம், கரிப்பட்டமுறிப்பு, மணவாளன் பட்டமுறிப்பு, ஒலுமடு, நெடுங்கேணி, கருவேலின் கண்டல் ஆகிய பல்வேறு கிராமங்களின் மக்கள் பயன் அடைவார்கள் என்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் (க-126)

## உலகின் கால்வாசி மக்களுக்கு சுகாதார வசதிகள் கிடையாது

### யாழ் சுகாதாரப் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 10

உலக மக்கள் தொகையில் கால்வாசியான 100 கோடி மக்கள் வறுமையிலும், சுகாதார வசதிகள் இன்றியும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இப்படிக் கூறினார் யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி என். கனகசபை.

சுகாதார வாரத்தையொட்டி சனசமூக நிலையத் தொண்டர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடந்தபோது அதற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

100 க்கு மேற்பட்ட தொண்டர்கள் கலந்துகொண்ட இக் கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''இரண்டாயிரமாவது ஆண்டில் சகலருக்கும் சுகவாழ்வு கிடைக்கவேண்டும் என்ற நோக்குடன் உலக சுகாதார நிறுவனம் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. 1978 ஆம் ஆண்டு முதல் இத் திட்டம் நடைமுறைக்கு வந்து 10 வருடம் சழிந்தும் இத்திட்டம் இன்னும் முழுமையடையவில்லை.

நாம் அடிப்படைப் பிரச்சினைகளை உணர்ந்து இத் திட்டத்தை அடிமட்டத்தில் இருந்து நடைமுறைப்படுத்த வேண்டும். இப்படி அவர் கூறினார்.

செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. எஸ். சிவானந்தராசாவும் உரையாற்றினார். (க 3)

## பாகிஸ்தானில் இருந்து பருப்பு

கொழும்பு, ஜூலை 10

பாகிஸ்தானில் இருந்து பருப்பு இறக்குமதி செய்வது பற்றி பரிசீலனை செய்து வருவதாக வர்த்தக, கப்பற்றுறை அமைச்சர் ஏ. ஆர் மன்சூர் நேற்று முன்தினம்நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சிஎம். பி. திரு. ஸ்டான்லி திலகரத்னாவின் கேள்வி ஒன்றுக்குப்பதிலளிக்கையில் அமைச்சர் மன்சூர் துருக்கியும் எமக்கு பருப்பை வழங்கும் நிலையில் உள்ளது என்று சொன்னார். (ஓ-ஏ)

## இளைஞர்கள் சிரமதானம்

வட்டக்கச்சி, ஜூலை 10

கடந்த வெள்ளிக்கிழமை இளைஞர்களால் வல்லை வீதியில் உள்ள குண்டும் குழியுமான பகுதி ஒரே நாளில் சிரமதானம் மூலம் சீரமைக்கப்பட்டது. (இ-160)

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

### செல்வி மேரிறெஜினு சரோஜினிதேவி மைக்கல்


மலர்வு: 26 - 11 - 1965 உதிர்வு: 10 - 06 - 1989

அன்புத் தோழியே!
அமைதியின் நிறைவிடமே!
ஆயுள் வேத கல்லூரியில்
ஆண்டொன்று முடித்திட்டு
இரண்டாண்டு முடியுமுன்
நீ எம்மை விட்டு விண்ணுலகம்
சென்றதன் காரணம் யாதோ?
வந்த பணி முடிந்ததென்று
நினைத்துவிட்ட காரணமோ!

உன் நினைவால் வாடுகின்றோம்
நாம் இன்று!
ஆறுது எம் துயரம்
அடைந்திடட்டும் சாந்தியென
இறைவனை வேண்டுகின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!

உன் நினைவால் வாடும்:
இலங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி
மாணவிகள், மாணவர்கள் (1172)

## 41ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### திரு. விஜயநாயகம் விஜயகுமார்

(இளைப்பாறிய பெரும் தெருக்கள் திணைக்களத் தொழில் நுட்ப உத்தியோகத்தரும், தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி அச்சக உரிமையாளரும்)

அன்னையின் மடியில்: 02 - 11 - 1946 ஆண்டவனடியில்: 01 - 06 - 1989

இதயத்தின் துயரங்களை
எழுதி வைக்க ஏடில்லை — உன்னை
இழந்ததுயர் தாழவில்லை எங்கள் அன்பே அன்பே
உதயத்தின் நிலவாக வந்தவனே!
உலகுக்கெல்லாம்
உயர்ந்த தொண்டு எது வென்று காட்டி நின்றாய்!
நிலவுக்கு ஒளி கொடுக்கச் சென்று விட்டாயோ?
நின்
நினைவலையில் நின்றுருகும் எங்களை யெல்லாம்
நினைத்தொரு கால் பாராயோ? பாராயோ? நீ
நடந்து வந்த பாதையெல்லாம்
நாம் புரண்டு அழுது
நாவசைய நாடசையும் உந்தன் புகழை
நினைந்து நினைந்து உருகுதே எம் நெஞ்சமெல்லாம்
நின்னையல்லால் யாரையிங்கு
நினைந்து வாழ்ந்தோம்
நீ என்றும் வளர் நிலவாய்
வாழ் நிலத்தில் வா! வா!!

★ ★ ★

அன்னார் 01-06-89இல் அகால மரணமானார். இவர் தெல்லிப்பளை கிழக்கைச் சேர்ந்த விஜயநாயகம் திருச்செல்வம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜயந்தி, விஜயவானி, விஜயந்தன், விஜயதப்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும். விஜயமோகன் கணக்காளர் அவுஸ்திரேலியா, விஜயருஜன் கணக்காளர் அவுஸ்திரேலியா, விஜயசாமுண்டீஸ்வரி G. I. O அவுஸ்திரேலியா, விஜயசிறி Computer Analizer அவுஸ்திரேலியா. ஆகியோரின் அன்பு அண்ணாவும். நாகராசா பல்கலைக்கழகம் அவுஸ்திரேலியா, வாசுகி G. I. O. யாழினி அவுஸ்திரேலியா ஆகியோரின் அன்பு மைத்துனரும். விஜயதர்சன், நரேன், ரேகான் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும். விஜயதக்சினியின் அன்பு மாமனாரும். காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னம்மாவின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற புகையிரத நிலைய அதிபர் பொன்னுத்துரை, முன்னாள் வரித்திணைக்களம் தங்கராசா, சீமேந்துக் கூட்டுத்தாபனம் நாகரத்தினம், மல்லாகம் நீதிமன்றம் சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும். காலஞ்சென்ற செல்வரத்தினம், கமலாகரன், சரஸ்வதி, பூரணம் ஆகியோரின் பெறுமகனும் இரத்திரராசா விஜயா ரூறிஸ்ற் & ரவல்ஸ் கொழும்பு. இரத்தினபாலன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும். வல்வெட்டித்துறை காலஞ்சென்ற டாக்டர் கிருஷ்ணசாமி மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும். பாலசுப்பிரமணியம், இராசவேல், இலட்சுமிதேவி, சண்முகானந்தம், அருளானந்தம், ரூபசௌந்தரி, இராஜேஸ்வரி, மங்களேஸ்வரி, ஞானேஸ்வரி, ஆகியோரின் அன்பு மைத்துனரும். கார்மேகசுந்தரம் உதவி அரசாங்க அதிபர், கணேசபாக்கியம், தியாகராசா ஓய்வு பெற்ற ஆசிரியர், நவரத்தினம் முன்னாள் சீமேந்துக் கூட்டுத்தாபனம். ஞானத்திலகம் முன்னாள் கணக்காளர் ஒட்டோஸ் ஸ்தாபனம் யாழ்ப்பாணம் ஆகியோரின் சகலனுமாவர்.

★ ★ ★

மேற்படி அந்தியேட்டிக் கிரியை 11-07-89 செவ்வாய்க்கிழமை அதிகாலை அன்னாரின் இல்லத்தில் (சின்னமலை தொண்டமாநாறு)நடைபெறும். அன்னாரின் மரணச்சடங்கில் பங்கு பற்றி உதவிகள் புரிந்த அனைவருக்கும் நன்றியறிதலைக் கூறுவதோடு மேற்படி கிரியையிலும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நன்றி!
உன் நினைவால் வாடும்;
தந்தை, தாய், மனைவி, மக்கள், சகோதரர்கள்.

சின்னமலை,
தொண்டமானாறு. [11472]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர் ஆசிரியர் நியமனம்; தடை உத்தரவு நீக்கப்பட்டது

கொழும்பு, ஜூலை 10

தொண்டர் ஆசிரியர்களை நியமிக்க 1986 இல் விதிக்கப்பட்ட தடையை நீக்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பான தீர்மானம் அமைச்சர் லொக்குபண்டார தலைமையில் நடைபெற்ற உயர் மாநாடு ஒன்றில் எடுக்கப்பட்டது.

பிராந்திய, மற்றும் மாகாணங்களின் கல்விப் பணிப்பாளர்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

பிராந்திய கல்விப் பணிப்பாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட பாடங்களைப் படிப்பிக்கத் தேவையான தொண்டர் ஆசிரியர்களை நியமிக்கும் விஷயத்தில் அதிபர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும்.

பொலன்னறுவ, அம்பாறை, அனுராதபுரம், தங்காலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் நிலவும் ஆசிரியர் தட்டுப்பாட்டை நிவர்த்திக்குமுகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## காட்டுமிருகங்கள் படையெடுப்பு:
# கனகராயன்குளத்தில் மக்கள் இடம்பெயர்வு

சேமமடு, ஜூலை 10

காட்டுமிருகங்களின் தொல்லை காரணமாக கனகராயன்குளம் பகுதி மக்கள் தமது பகுதியை விட்டு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

பல மாதங்களாக இப் பகுதியில் போதிய மழைபெய்யாததால் குடி தண்ணீர் இன்றித் தவிக்கும் காட்டு மிருகங்கள் குளப் பகுதியை அண்டியுள்ள குடியேற்றத் திட்டங்களை நோக்கிப் படை எடுக்க ஆரம்பித்துள்ளன.

தண்ணீர் பற்றுக்குறை காரணமாகவும் காட்டுமிருகங்களின் படையெடுப்புக்கும் பயந்தும் இப்பகுதி மக்கள் இடம்பெயர ஆரம்பித்திருக்கின்றனர். (உ-ரி)

# மின்சார இணைப்புப் பெற பிணை எதுவுமின்றிக் கடன்
## மக்கள் வங்கியின் புதிய திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

மின்சார இணைப்புப் பெறுவதற்கு பிணை எதுவுமின்றி கடன் வழங்கும் திட்டம் ஒன்றை மக்கள் வங்கி அறிமுகம் செய்துள்ளது.

இலங்கை மின்சார சபையுடன் இணைந்து மக்கள் வங்கி பிணை இன்றி தனிநபர், தொழில் நிலையம் என்ற இரு அடிப்படையில் கடன் வழங்க இருக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் தனிநபர் மூவாயிரம் ரூபாவையும், தொழில் நிலையத்தினர் ஐயாயிரம் ரூபாவையும் கடனைச் பெறலாம்.

பதினைந்து வீத வட்டிக்கு இக்கடன் வழங்கப்படவிருக்கிறது.

இக்கடனுக்கு இலங்கை மின்சார சபையே பொறுப்பு என்றும் —

தவணைப்பணம் செலுத்தப்படாவிட்டால்மின்இணைப்பை சபை துண்டிக்கும் என்றும் வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-3)

## இன்றைய காலக்கட்டத்தில்
# வழிபாட்டின் மூலமே அமைதி பெற முடியும்

யாழ்ப்பாணம், ஜூலை 10

இன்றைய காலகட்டத்தில் தெய்வவழிபாடே அமைதியையும் சாந்தத்தையும் பாதுகாப்பையும் அளிக்கவல்லது. எமக்காக எமது பிள்ளைகளுக்காக எமது குடும்பத்தினருக்காக சுயநலத்துடன் வழிபட்ட நாம் இன்று எமது இளஞ் சந்ததியினரின் சிறந்த எதிர்காலத்திற்காகப் பொது நலநோக்குடன் பிரார்த்திக்கத் தலைப்பட்டுள்ளோம்.

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், இந்து இளைஞர் மன்றத்தினர் ஆகியோரால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரார்த்தனை வைபவத்தில் அதிபர் கா. கணேசதாசன் மேற்கண்டவாறு கூறினார்.

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், அண்மையிலுள்ள பாடசாலை அதிபர்கள் பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

ஓய்வுபெற்ற அதிபர் திருமதி க. தருமலிங்கம், ஆசிரியை திருமதி ச. சந்திரசேகரி ஆகியோர் கூட்டு வழிபாடு நடத்தினர். (ச)

# பாகிஸ்தானில் இருந்து பெ. வெங்காயம் இறக்குமதி

பாகிஸ்தானில் இருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் அறிவித்து உள்ளது.

இறக்குமதியான பெரிய வெங்காயம் சில்லறைக்கு ஒரு கிலோ 16 ரூபாவாகவும் மொத்தமாக கிலோ 15 ரூபா வீதமும் விற்பனை செய்யப்படுகிறது.

இதுகாலவரை பெரிய வெங்காயம் அனேகமாக இந்தியாவில் இருந்தே இறக்குமதியானது. அந்த வெங்காயம் பம்பாய் வெங்காயம் என்றே சொல்லப்பட்டது. (ஒ-எ)



இலங்கை வங்கியின் பொன் விழாவை முன்னிட்டு நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற விசேஷ பூசையின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

முதலாவது படத்தில் ஆலயத்தில் விசேஷ பூசையையொட்டி கிரியைகள் நடைபெறுவதைக்காணலாம் — இரண்டாவது படத்தில் யானையுடன் இலங்கை வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர் திரு. கே. துரைராஜா, செயற்பாட்டு முகாமையாளர் திரு. எம். கனகரத்தினம், மாவட்ட முகாமையாளர் திரு. கே. கணேசமூர்த்தி, முன்னாள் மாவட்ட முகாமையாளர் திரு. வி. சிறிரங்கநாதன் ஆகியோர் காணப்படுகின்றனர். (படங்கள் – அகில்ராஜ்)

# விமான மூலம் மருந்து தருவிக்க அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

வட பகுதி வைத்திய சாலைகளுக்கு தேவையான மருந்து வகைகளை விமானம் மூலம் எடுத்து வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வட பகுதி வைத்திய சாலைகளில் தற்பொழுது மருந்து வகைகளின் கையிருப்பு பெருமளவில் குறைந்திருக்கிறது.

அத்தியாவசிய மருந்துகள் கூட இன்னும் சில தினங்களுக்கே போதுமானதாக உள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் பற்றுக்குறை நிலையைத் தவிர்ப்பதற்காக மருந்து வகைகளை விமானம் மூலம் தருவிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு சுகாதாரத் திணைக்களத்துக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தென்பகுதியில் நிலவரம் சீராக இருப்பதாகவும்—

கொழும்புக்கு வந்து லொறிகளிலேயே மருந்துகளை எடுத்துச் செல்லும்படியும் கொழும்பிலிருந்து பதில் அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது மருந்துவகைகளை மாற்றுவழி மூலம் தருவிப்பதற்கு சுகாதாரத் திணைக்களம் முயற்சி எடுத்திருக்கிறது. (ஒ-10)

# மட்டக்களப்புப் பகுதிக்கு 1500ஆசிரிய பயிலுநர்கள்

மட்டக்களப்பு, ஜூலை 10

25 ஆயிரம் ஆசிரியர் பயிலுநர் தெரிவு செய்யும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரத்து இருநூறு முதல் ஆயிரத்து ஐந்நூறு பேர்வரை நியமனம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மட்டக்களப்புக் கல்வித் திணைக்களம் மேற்கொண்ட மதிப்பீடுகளின் பிரகாரம் ஆயிரத்து ஐநூறு ஆசிரிய பயிலுநர்கள் வெற்றிடம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-21)

# சிங்கள வாய்மொழி பரீட்சை

அரியாலை, ஜூலை 10

அரச திணைக்களங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு சிங்கள வாய்மொழிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் தத்தமது திணைக்களங்களின் ஊடாகத் தமது விண்ணப்பப் படிவங்களை இம்மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும் எனக்கோரப்பட்டுள்ளது. (இ-13)

# “பொன்மாரி” நூல் வெளியீடு

பருத்தித்துறை, ஜூலை 10

'கவிஞர் துன்னையூர் செல்லமுத்துவின் ''பொன்மாரி'' நூல் வெளியீட்டு விழா பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் கலாநிதி வித்துவான் க. ந. வேலன் தலைமையில் நடைபெற்றது.

யதார்த்தா கலை இலக்கிய வட்டத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட வெளியீட்டு விழாவில் புலோலி கொத்தணி அதிபர் திரு. வி. சே. ஏகாம்பரநாதன் மங்களவிளக்கேற்ற கரவெட்டி பிரதேசசபை இலிகிதர் திரு. ஆ. புண்ணியமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார். பண்டிதர். க. கணபதிப்பிள்ளை ''பொன்மாரி'' பாட்டுப் பாடினார்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய முகாமைத் தர்மகர்த்தா திரு. எஸ். சந்திரசேகரம் பொன்மணி நூலைவெளியிட்டு வைக்க வட இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி எஸ். கோபாலகிருஷ்ணன் முதலாவது பிரதியை பெற்றுக் கொண்டார்.

பண்டிதர் பிரம்மஸ்ரீ கை. நமசிவாயக்குருக்கள் முருக. வே. பரமநாதன் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினர் திரு. வீ. எஸ். தேவதாஸன், கொத்தணி அதிபர் திரு. வி. சே. ஏகாம்பரநாதன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

நூலாசிரியர் உரையை அடுத்து கலாநிதி வித்துவான் க. ந. வேலன் நூலாசிரியர் கவிஞர் துன்னையூர் செல்லமுத்துவிற்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். யதார்த்தா கலை இலக்கிய வட்டச்செயலாளர் திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் நன்றியுரை கூறினார். ''பொன்மாரி'' நூல் வெளியீட்டினூல் அன்றைய தினம் பெறப்பட்ட பணம் முழுவதையும் நூலாசிரியர் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கே காணிக்கையாகக் கையளித்தார். (க-118)

# விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 10

பிரெஞ்சுகலாச்சார புரட்சியின் 200 ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூருமுகமாக விசேட கருத்தரங்கு ஒன்று எதிர்வரும்14 ஆம்திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் பிரெஞ்சு - நட்புறவுச் சங்க காரியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது. (க-3)


## உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி
### பழைய மாணவர் மன்றம்
## வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 16 - 07 - 1989 ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்குக் கல்லூரியில் நடைபெறும்.

கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கல்லூரி அதிபர்.

(11485)

## வேலை வாய்ப்பு

(1) கிறீக் கப்பல்
(2) சிங்கப்பூர் கப்பல்

பலதரப்பட்ட வேலைகளுக்கும் ஆட்கள் தேவை.
உடனடிப் பயணம்

● ஓமான்
றெயிலேர்ஸ்

● குவைத் - சிங்கப்பூர்
பணிப்பெண்கள்

விரும்புவோர் நேரில் வரவும்

க. இந்திரலிங்கம் (சந்திரன்)

## நிரோஷன் என்ரபிறைஸ்

பருத்தித்துறை வீதி,
மயிலிட்டி, காங்கேசன் துறை.
[TB வைத்தியசாலை அருகில்]

[11436]

நம்பிக்கை
நாணயத்தின்
சின்னம் ——> ஷப்ரா




நிதித்துறையில்
உங்கள்


## இரண்டாவது பிறந்த தின வாழ்த்து



## செல்வன் சந்திரலிங்கம் - விமேஷ்

கொக்குவில் மேற்கு செல்வ வாசாவைச் சேர்ந்த சந்திரலிங்கம் — நாகநந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் விமேஷ் இன்று (10 - 07 - 1989) இல் தனது இரண்டாவது பிறந்த தினத்தை மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். விமேஷை அப்பா, அம்மா, அக்கா தர்சனா, அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, நியூசிலாந்தில் இருக்கும் பெரியப்பா குடும்பத்தினர், கனடாவில் இருக்கும் பெரியப்பா குடும்பத்தினர், மாமாமார், மாமிமார், ஜேர்மனியில் இருக்கும் பெரிய மாமா, உடுப்பிட்டியில இருக்கும் சின்னமாமா, சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார், உறவினர்கள் யாவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்க என அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

(1178)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடக் "கண்டு களியுங்கள்" போட்டி
## இறுதிச் சீட்டிழுப்பில் வெற்றியீட்டியோர்

**1ஆம் பரிசு:**

டபிள்யூ. ஏ. இந்திகா
ஸ்டுடியோ சேனபிரபா, அம்பலாந்தோட்டை.
★ சிங்கப்பூர் சென்று திரும்ப விமானச் சீட்டும்
கைச்செலவுக்கு 100 அமெரிக்க டொலரும்

**2ஆம் பரிசு:**

சமன் பி. வகாராச்சி
மனம்பெரி கெதர, உறித்தட்டிய, மாத்தறை.
★ பாங்கொக் சென்று திரும்ப விமானச் சீட்டும்
கைச்செலவுக்கு 100 அமெரிக்க டொலரும்

**3ஆம் பரிசு:**

எஸ். கே. வை. ஹெட்டியாராச்சி
வடுபொல, இப்பாகமுவ.
★ மாலைதீவு சென்று திரும்ப விமானச் சீட்டும்
கைச்செலவுக்கு 100 அமெரிக்க டொலரும்

## ★ கொடக் கமராக்களை வென்றோர் ★

1. செல்வி ஐ. எச். தௌபீக் 158, நாகலம் வீதி, கொழும்பு-14.
2. ஐ. எம். எம். றம்ஸி, 32, 5ஆம் குறுக்குத் தெரு, புத்தளம்.
3. செல்வி பாத்திமா தாஹிரலி 6, கிளென் ஆபர் பிளேஸ், கொழும்பு-4.
4. டபிளியூ. ஏ. லக்ஷ்மன் எல்சன் 10, மத்திய வீதி, சைனு கார்டின், காலி.
5. திலானி அமரசிங்க 12/1, ஆனந்த பாலிகா மாவத்தை, கோட்டே.
6. மகிந்த சி. கால்லகே, 93/3, சுபத்திராராம ஒழுங்கை, நுகேகொடை.
7. குருகுலசூரிய அன்டன் சுரேஷ் மே/பா டி. அன்டன், 76/5, ராகம வீதி, பஹலகரகஹமுன்ன, கடவத்தை.

## கொடக் பணப் பைகள் வென்றோர்

1. கே. பி. டபிளியூ. நிமால், சங்க வீதி, மகாவத்தை, பலப்பிட்டி.
2. சசிகலா சமரசிங்க 8/45, நாகஉறவத்தை வீதி, மகரகம.
3. ஏ. விதாரன [3792] புடவை ஆலை.
4. லசித்த லொக்குபாலசூரிய 214, சோமானந்த மாவத்தை, கங்குல, பாணந்துறை
5. பி. கே. பிரேமா ஜயந்த புஷ்பகுமார தபால் நிலையம், பலாங்கொ...
6. சமந்தி மாதிவல 23, ஹெந்தலை, வத்தலை
7. ஜோண் ஏ. நிஷாந்த பெர்னாண்டோ 'மெல்றோஸ்' 62, சென். நிக்கொலஸ் வீதி முன்னக்கர, நீர்கொழும்பு
8. டி. டி. டபிளியூ. கே. ஜயத்திலக மத்திய, மருந்தகம், பத்தவெல
9. தரங்கா ஜயசிங்க 2/18 1 ஆம்ஒழுங்கை, எகொடவத்தை பொரளஸ்கமுவ
10. காஞ்சனு பிரபாஷ் வீரரத்ன 35, உயன்கலே வீதி, பாணந்துறை
11. எம். மல்லிகாரத்ன லெல்லொபிட்டிய, இரத்தினபுரி
12. ஜி. சி. ஆர். பொன்சேக 'ஆஷா' வல்பொல, கொட்டவல்ல ரம்புக்கனை
13. சிசில் கே. பெரேரா 204, பல்லேகம, அம்பிட்டிய கண்டி
14. முருகையா சர்வேஸ்வரி முகமாலை எழுதுமட்டுவாள்
15. ஏ. என். கதிரதாச, மே/பா உதேனி திஸாநாயக்க, 'சிரிமதுர' கொக்கரல்ல
16. கே. அஜித் விக்கிரமசிரி பீரிஸ், 2, 'ஸ்ரீயாசெவன' மாத்தளை வீதி, அம்பதன்ன
17. அனோஜா பெர்னாண்டோ, 658, பேராதனை வீதி, கண்டி
18. உபாலி புளத்கம பண்டார 424, யூனியன் பிளேஸ், கொழும்பு 2
19. ரி. சி. எல். குணரத்ன 65, மரதகஹமுல்ல,
20. ஜவன் ஜயசிரி அரசகுலரத்ன பிங்கிரிய
21. ஆனந்த சப்பிரமாது 'நீலந்தி' சப்பிரமாது பிளேஸ், வராகொட
22. செல்வி சி. ஈ. சூரியபெரும 25, எல்ஹலன வீதி, மகரகம
23. வை. எம். கே. பி. யாப்பா 'யாப்பா வாசல; சினிகம பண்டாரவளை
24. யமுனு சமரதுங்க, தம்பஸ்ஸ, நாரம்மல
25. ராஜா குணசேகர 119, பிரதான வீதி, கேகாலை
26. கசும் விக்கிரசிங்க, 119, பிரதான வீதி, கேகாலை
27. எச். சுமிந்த பிரசாத், 34, பொன்சேக வீதி, பாணந்துறை
28. சரத் ஏ. விக்கிரமசிங்க, இலங்கை வங்கி, சிராவஸ்திபுர
29. சமந்த, 622, நாவல வீதி, ராஜகிரிய
30. அனுராதா எல்லேபொல 64, 5 ஆம் ஒழுங்கை, மல்கடுவாவ, குருநாகல்
31. காமினி டி. சொய்ஸா, 14, பார்க் வீதி, காலி
32. கிளென் எஸ். ஜலேந்திரன், 108, வாலுக்காராம வீதி, கொழும்பு-3
33. டி. கமால் செனவிரத்ன, 113, பிரதான வீதி, கேகாலை
34. டபிளியூ. டி. வி. ஜயபால 11, கார்ல்சுரு, அவெனியூ, பொரளை கொழும்பு-10
35. யூ. ஏ. எல். ஆர். டி சில்வா 101, நுவரெலிய வீல், தலவாக்கெல்லை
36. ரூடி ஸைஸீல் 46, முதுன்னுவலவெல, மாத்தளை ஊடாக
37. எஸ். சுமேந்திரன் 'வசந்தவாசா' பதாவதை, இளவாலை
38. கெமுனு கந்தென்கொட பளப்பிட்டிய. கஹவத்தை
39. எஸ். விஜேரத்ன 219, காலி வீதி, தெஹிவளை
40. ஜி. ஆர். விஜேகுணரத்ன 391, காலி வீதி, வேவல, உறிக்கடுவ
41. வி. அருணசலம் ஜயந்தி புத்தூர் மேற்கு, நாவற்குழி
42. எவ். சி. டபிளியூ. பெரேரா 1. கட்டுகுருந்த, மொறட்டுவை
43. கிதாஞ்சலி குமாரி விஜேகோன் 'செனசும' இத்தலியத்த, கூம்பியன்கொட, மாத்தளை
44. கீர்த்தி சிரிவர்த்ன 300/3, மாகொல வடக்கு, மாகொல
45. எஸ். ஆர். விக்கிரமபண்டா 5, பாடசாலை ஒழுங்கை, பிலியந்தலை
46. ரம்யா லலித் பண்டார மே/பா. தபால் நிலையம், வீதுருபொல கெப்பிட்டிப்பொல
47. தனபால வீரசூரிய, லங்கா வோல்டைல்ஸ் (பிறேவேட்) லிமிட், பலாங்கொடை
48. அனுரா ஹெட்டியாராச்சி, மொட்டபுள்ளிவத்தை, ரம்புக்கனை.
49. ஜே. எம். துவான் அமீர், திருகோணமலை வீதி, மிகிந்தலை.
50. அனுஷாமலி கொடகே, 13/8, பெயார்லைன் வீதி, தெஹிவளை.
51. தாரணி குணநாயகம், 54, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.
52. ஆர். ஜயலிங்கம், 'சன்னி' 18, லோவர் கிங் வீதி, பதுளை.
53. கே. ஜி. சுகதபால, 10, நாவல வீதி, ராஜகிரிய.
54. யூ. பி. ஜே. ரத்னுயக, 'மிஹிர', கே/அக்குருகொட, கம்புறுப்பிட்டி.
55. சாமன் இரோஷனி சந்திரசேகர, கொஸ்வாடிய, மகாவெவ.
56. நிரோத வித்தியாரத்ன, 43/4, தம்பஹேன வீதி, மகரகம.
57. எச். எம். இந்திகா குமார ஹேரத். பிற்றவெல. லோகஹெட்டிய.
58. எச். பி. செனவிரத்ன பண்டார, பி.எஸ் எஸ். அலுவலகம், மகாஇலுப்பல்லம
59. நளின் ஜயசிங்க, தஷ்மா போட்டோ, வெலிக்கடை, ராஜகிரிய.
60. சிசிர சேனுரத்ன, 'சிசிர செவன' கெலிலிப்பிட்டிய, அரநாயக்க
61. எச். பி. பிரேமரத்ன, 142, பலும்மஹர, முதுன்கொட.
62. என். பி. ரத்னுயக்க, 4, தனிவெல்லகம, மிரிஸ்வத்தை மாதம்பே.
63. சந்திரசேன பெரேரா, 29/15, யஹம்பத் மாவத்தை, மகரகம.
64. கே. எம். ஆர். எமெல்டா பீரிஸ், மடம் வீதி, நாயக்ககந்த, வத்தளை.
65. புண்ணியசிரி பெத்தன்னுயக்க, 92/11, பொன்லேன்கொட வீதி, கொழும்பு - 5
66. வி. இந்திரகுமார, 16, 'குசும்நதிய' குண்டசாலை.
67. ஆர். பி. நவரத்ன, அரச திரைப்படப் பிரிவு, கிருலப்பனை.
68. கிருஷ்ணஜினு விஜேரத்ன, 'ஸ்ரீதார', ஹெட்டிமுல்ல, கொட்டதெனியாவ.
69. ஹேமந்தி பிரியன்வதா விக்கிரமசிங்க, விக்கிரகமாவத்தை, கெலஸ்கமுவ, ஹல்தொட்ட,
70. ஆர். பி. டி. சில்வா, 250, பேராதனை வீதி, கண்டி.
71. பி. சுமணசிங்க, 20, 'ஹில் வீதி' அளுத்கம, தோகமுவ, யக்கல.
72. எச். எச். ஆரியரத்ன, ஹொட்டேல் டிலக்ஸ், அம்பகமுவ வீதி, நாவலப்பிட்டி.
73. எம். எஸ். எம். பைசர், 4, வோர்ட் வீதி, காலி.
74. ரி. கே. ஜீவபத்ம 124, வெலேகொட, மாத்தறை,
75. மொகமட் பசால் சனுஸி, 61, பள்ளிபொருவ, ஹெம்மாத்தகம.
76. எம். எம். விக்கிரமசிங்க, கார்டின் சிற்றி, தியத்தலாவை.
77. ஜோண் சிசில் பெரேரா, 12/2, டி சேரம் வீதி, கல்கிசை.
78. மஞ்சுளா அபேசேகர, 30/1, அபேசேகர வீதி, நீர்கொழும்பு.
79. சமந்தி கொலன்ன, 413, டெம்பிள் பிளேஸ், பெப்பிலியான.
80. எம். எம். அனுர மனம்பேரி 'துஷாரா', வலதுர, குருவிற்ற.
81. மொகமட் இஸ்மத், 146/2, கம்பொலவெல, கம்பொல.
82. எம். டி. கே. குணதிலக, 'கனகா' சாலிய மாவத்தை அனுராதபுரம்
83. யுவானி தம்பு, 35/3, ஹோர்டன் பிளேஸ், கொழும்பு - 7
84. சந்திரசேனஜயசாந்த 'சாந்த செவன' கட்டுமெரண, பதுளைவீதி,நுவரெலியா
85. லிண்டா ஈரியகம, 'ஈரியகம வளவு' பேராதனை
86. இந்திரஜித் குமார சேனுரத்ன, 845/12, தொடட்கஹஹேன, கோதட்டுவ நியூ டவுன் முல்லேரியாவ
87. எஸ். 1 வீக்கா மஸ்ரூக், 76, சென். பெனடிக்ட் மாவத்தை, கொழும்பு-13
88. செல்வி எஸ். சந்திரா, 30, கலவத்தை, கட்டுகஸ்தொட்ட, கண்டி
89. சத்திய தீபா, ஜி. பி. எஸ். வீதி, கல்வியங்காடு. யாழ்ப்பாணம்
90. சி. நில்மினி உறப்புவாராச்சி, சத்துரிக்கா ஸ்டோர்ஸ், ராஜாங்கன. சாலிய அசோகபுர, கல்கமுக
91. கிறிஸ்துஸ் விக்கிரமசேகர, 285, கம்மத வீதி, துடல்ல ஜா-எல
92. கயா ஜயவர்தன, 15, 4 ஆம் ஒழுங்கை, ரத்மலானை
93. ஜி. எம். பியதாச, 496/3, சுசிலாராம வீதி, மாவபே
94. டபிளியூ. ஏ. எல். கே. பண்டார, 'அஜந்தா' நாராஹேன்பிட்ட, ஹெட்டிமுல்ல, கேகாலை
95. அனுர டி சில்வா. குவன்புர' கொழும்பு - 8
96. பி. சுனில் ஜயந்த, 25/6, சியப்பலாகஸ்தன்ன வீதி, கண்டி
97. பிரபாத் நாணயக்கார, ஏ ஒன் ஸ்ருடியோ, கண்டி வீதி, நிட்டம்புவ
98. இஸட். சமீர், 75/1, டேவிட்ஸன் வீதி, கொழும்பு - 4
99. எஸ். எஸ். ஜண்டியானயனு, 224, போக்குந்தர, பிலியந்தலை
100. யூ. பி. விஜேகோனன, 4 பி / 8 - 5, மத்தேகொட வீடமைப்புத் திட்டம் பொல்கஸ்ஸோவிற்ற

# இலங்கையில் கொடக் பொருள்களை விநியோகிக்கும்
# மில்லர்ஸ் லிமிட்டெட்

PRODUCTS BY Kodak

● வெற்றியீட்டியோர் பரிசுகளைப் பெற்றுக்கொள்ள ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் மில்லர்ஸ் லிமிட்டெட்டுக்கு வரும்படி கேட்கப்படுகின்றனர்.

## தினசரி ரூபா ஐம்பது அலவன்ஸ்!

கொழும்பு. ஜூலை 10

வேலைக்குச் சமூகமளிக்கும் மத்திய வங்கி ஊழியர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாளும் 50ரூபா அலவன்ஸ் வழங்கப்பட்டு வருகிறது:

சென்ற 5ஆம் திகதியில் இருந்து இந்தக் கொடுப்பனவு நடப்பதாக மத்திய வங்கிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சகல தர ஊழியருக்கும் ஒரே மாதிரியாக இந்த அலவன்ஸ் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிக்கவே இந்த அலவன்ஸ் வழங்கப்படுகிறது. (ஓ-எ)

## பாப்பரசர் வேண்டுகோள்

இலங்கையில் அமைதி நிலவ வேண்டும் என்று பரிசுத்த பாப்பரசர் வேண்டுகோள் விடுத்தார்.

எந்தப்பிரச்சனைக்கும் தீர்வு, இலங்கையில் வாழ்கின்ற சகல சமய, இன மக்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளை மதிப்பதாக இருக்கவேண்டும் என்றும் பரிசுத்த பாப்பரசர் தெரிவித்தார். (ஓ-எ)

## ஐ. தே. க. செயற்குழு இன்று கூடுகிறது

கொழும்பு, ஜூலை 10

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டம் இன்று திங்கள் மாலை ஸ்ரீகோதாவில் நடைபெறும்.

ஜனாதிபதி பிரேமதாஸா கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

முக்கிய அரசியல் தீர்மானங்கள் சில இக்கூட்டத்தில் எடுக்கப்படும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-எ)

## விவரம் சேகரிப்பு

வவுனியா, ஜூலை 10

மாவட்டரீதியிலான இருபத்தையாயிரம் பயிற்சி ஆசிரியர்களை செப்டம்பர் மாதத்தில் நியமிப்பதற்கான ஜனாதிபதியின் விசேட பணிப்புரையை அடுத்து—

பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் - மாணவர் எண்ணிக்கை நிலை வர விபரங்களுடன் மாவட்ட பிரதி பணிப்பாளர்கள் இன்று திங்கட்கிழமை கல்வி அமைச்சுக்குச் சமுகம் தரவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது. [ஓ-164]

## பாடவிதானத்தில் பாளி மொழிகள் சமஸ்கிருதம்

கொழும்பு, ஜூலை10

1990 ஆம் ஆண்டில் இருந்து ஜி. சி. ஈ. சாதாரணதரப் பத்திரப் பரீட்சைக்கு பாடவிதானத்தில் பாளி, சமஸ்கிருதம், அரபு ஆகிய மொழிகளும் சேர்க்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சில் நடந்த உயர் மாநாடு ஒன்றில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இந்த மாநாடு நடந்தது. [க-எ]

## மலசல கூட வசதி இல்லை

வடமராட்சி ஜூலை 10

வடமராட்சியில் நடைபெற்ற இராணுவத் தாக்குதலின்போது சேதமடைந்த நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கோ ஆசிரியர்களுக்கோ மலசலகூடவசதி இன்னும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர்கள் தங்குவதற்கு இடவசதியின்மையால் கல்லூரி மண்டப நடைபாதையில் அவர்கள் தங்குவதைக் காணக்கூடியதாயிருக்கிறது. (ச-160)

## இளைஞர் சடலம்

வவுனியா, ஜூலை10

புளியங்குளம் நெடுங்கேணி வீதியில் வியாழன் காலை சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இவரது பெயர் மோகன் என்றும் இவர் பழைய வாடி பகுதியைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்றும் தெரிகிறது. (ஒ-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

**பொருள்:**

ஆற்றலுடையவரின் ஆற்றலாவது பணிவுடன் நடத்தலாகும்; அது சான்றோர் தம் பகைவரைப் பகைமையின் இருந்து மாற்றுகின்ற கருவியாகும்.

உதயன்

உண்மை - விடுதலை - ...

இல. 192/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 22072
10 - 07 - 1989 த. பெ. இல. 23

## நிரந்தரமாக வேண்டப்படுவன

**மா** — கோதுமை மா — விடயம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த சில வாரங்களாக ஒரு பெரும் விடயமாக. — மாவிடயமாக மாறிவிட்டது. மாவுக்குத் தட்டுப்பாடு. அதற்கு அதிக விலை அறவிடப்படுகிறது. மாவிலிருந்து தயாரிக்கப்படும் பண்டங்களின் விலைகளும் உயர்த்தப்பட்டுவிட்டன. அவை மட்டுமா? அவற்றின் விலைகளைப் பார்த்து ஏனைய உணவுப் பொருள்கள் உணவுப் பண்டங்களின் விலைகளும் உயர்ந்துவிட்டன.— இவை அன்றாடம் மக்கள், பாவனையாளர்கள், தெரிவிக்கும் முறைப்பாடுகள். உண்மையான குறைபாடுகளும் கூட!

திருமலையிலிருந்து கப்பல் மூலம் மாவை நேரடியாகத் தருவிப்பதில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. மாற்று நடவடிக்கைகள் மூலம் மா இயன்றளவு தருவிக்கப்படுகிறது மாவுக்குப் பெருமளவில் தட்டுப்பாடு ஏற்படுவதற்குக் காரணமில்லை. — இவை அதிகாரிகள் காட்டும் பக்கம்!

மாவைத் தருவித்துக் கொடுப்பவர்களுக்கும், விநியோகிப்பவர்களுக்கும் இடையில் சில கொடுக்கல் வாங்கல் பிணக்குகள் உள்ளதால் மாவைக் கிலோ எட்டு ரூபாவுக்கும் விற்க முடியவில்லை என்ற உள்நிலை ஒரு புறம்.

திருமலையிலிருந்து மாவைக் கொண்டு வருவதற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு லொறி அனுமதி வழங்கிய போதிலும், சாரதிகள் மற்றும் ஊழியர்கள் பாதுகாப்புக் காரணங்கள் குறித்துப் பின் நிற்பது மற்றொரு நிலைப்பாடு.

அதன் காரணமாக, திருமலையிலிருந்து லொறி மூலம் மா ஏற்றி வருபவர்களை ஊக்குவிப்பதற்காக, யாழ். மாவட்டப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பாதுகாப்பு நிதியம் ஒன்றை ஆரம்பிப்பது குறித்துக் கவனத்தில் எடுத்துள்ளன.

இதற்கிடையில், திருமலையிலிருந்து மாவைத் தருவிக்கத் தனியார் துறைக்கும் அனுமதி வழங்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தமை இன்னொரு புறம்.

இவ்வாறாக, மா விடயத்தில் பல முகங்கள், பக்கங்கள் உள்ளன.

எத்தனை பக்கங்கள் இருப்பினும், மா தட்டுப்பாடு இன்றி, அது உரிய விலையில் கிடைக்க வேண்டும் என்பதே பாவனையாளர்களின் விருப்பமாகும். அதுவே எங்கள் நிலைப்பாடுமாகும். உணவுத்திணைக்களமாயினுஞ்சரி கூட்டுறவுத் திணைக்களமாயினுஞ்சரி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாயினுஞ்சரி, தனியார் துறையாயினுஞ்சரி. அது பாவனையாளர் நலனை முன்வைத்தே இயங்கவேண்டும். அந்த நலனுக்குக் குந்தகம் வரும்போது, இடையூறுகள் உண்டாகும்போது; குந்தகங்கள், இடையூறுகளை உருவாக்கும் பின்னணிகள் தோன்றும் போது; அவற்றை எதிர்நோக்கி, சமாளித்து, வெற்றி கொண்டு மக்களுக்கு உதவும் கடமையும் பொறுப்பும் அந்த ஸ்தாபனங்களுக்கு, அவற்றின் அதிகாரிகளுக்கு, உரிமையாளர்களுக்கு உண்டு.

இந்த இரண்டினையும் மறந்து, தங்களுக்குள் உள்ள நிர்வாக செயற்பாட்டுப் பேதங்களைப் பெரிதாக்கி, ஒருவர் மற்றவர் தலையில் பழியைச் சுமத்தி, பாவனையாளர்கள் பாதிப்புக்கு ஆளாக இடங்கொடுத்தலாகாது.

மக்கள் நலனை நிறைவேற்றுவதில் தடங்கல்கள் வரும்போது, சமயோசிதமாகவும், சேவை மனப்பான்மையுடனும் செயற்பட மனம்கொள்ளுதல் அவசியம்; அதுவே பிரதானமும் ஆகும்.

லொறி ஊழியர்களுக்குப் பாதுகாப்பு நிதியம் உண்டாக்கி அவர்களுக்கு மாவைத் திருமலையிலிருந்து ஏற்றி வர வகுத்திருக்கும் திட்டம் சமயோசித செயற்பாட்டுக்கு நல்லதோர் உதாரணம்.

கோதுமை மாவுக்கு மட்டுமன்றி, ஏனைய பல பாவனைப் பொருட்களுக்கும் எப்போதும் இந்த நிலை வரலாம்; போகலாம். இதனைவிட மோசமான நிலையும் உண்டாகலாம்.

ஆனால் மக்கள் நலனும், பொறுப்பு உணர்ச்சியும், கடமை உணர்வும் இருந்தால் மக்கள் பாதிப்படையாமல் பார்த்துக்கொள்ள வழிபிறக்கும். அவை நிரந்தரமாக வேண்டப்படுவன என்பதைச் சம்பந்தப்பட்ட சகலருக்கும் வலியுறுத்த விழைகின்றோம்.

### மகாகும்பாபிஷேகம்

அம்பாறை, ஜூலை 10

நயினாதீவு பிரண்டையம்பதி ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று 10ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கும் 10-30 மணிக்கும் இடையிலான சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.

கிரியாகால நிகழ்ச்சிகள் 6ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10-30மணிமுதல் மாலை 5 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தல் வைபவம் நடைபெற்றது.

கும்பாபிஷேக பிரதமகுருக்களாக நயினை நாகபூஷணி ஆதீனகுரு சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களும் சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்களும்கடமையாற்றுவார்கள். (ச)

### அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

நவாலி வடக்கு நாச்சிமார் முருகன் ஆலய அலங்கார உற்சவம்நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி20 ஆம்திகதி வியாழக்கிழமை முடிவடையும்.

21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைரவர் பொங்கல் மாலை 4 மணிக்கு நடைபெறும். (ச)

### வவுனியா போக்குவரத்து நிலைமை

வவுனியாவுக்கும் அனுராதபுரத்துக்கும் இடையிலான போக்குவரத்துச் சேவையில் வெள்ளி சனிக்கிழமைகளில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது. (இ-164)

## பிரதமர் ராஜீவின் 3 நாடுகள் பயணம் ஜூலை12இல் ஆரம்பம்

புதுடில்லி, ஜூலை 9

மூன்றுநாடுகள் சுற்றுப் பயணத்தை பிரதமர் ராஜீவ் காந்தி வருகிற 12ஆம் திகதி ஆரம்பிக்கிறார்.

முதல் மூன்று தினங்கள் பாரிஸில் தங்கி பிரெஞ்சு புரட்சியின் 200 ஆவது ஆண்டு நிறைவுவிழாவில் கலந்து கொண்டுவிட்டுபிரதமர்ராஜீவ் பின்னர் மாஸ்கோ செல்வார். அங்கு ஒருநாள் தங்கி சோவியத் தலைவர் கோர்பச்சேவுடன் பேச்சுக்கள் நடத்துவார்.

பிறகு பாகிஸ்தான் சென்று பிரதமர் பெனாஸிருடன் பேச்சுக்களை நடத்துவதுடன் சியாச்சென் எல்லைப்புறஉடன்பாட்டில் கைச்சாத்திடுவார்.

● கோர்பச்சேவ் வேண்டுகோள்

## வார்ஸோ அமைப்பு நாடுகள் தனித்து செயல்பட வேண்டும்

புக்காரெஸ்ற் ஜூலை 9

வார்ஸோ நாடுகள் சோஷலிச சமுதாய அமைப்பை நோக்கி தங்கள் தங்கள்பாதையில்செல்ல வேண்டும் என்று சோவியத் ஜனாதிபதி மிக்செய்ல் கோர்பச்சேவ் கேட்டுக்கொண்டார்.

ருமேனியதலைநகர் புக்காரெஸ்ரில் நடந்த வார்ஸோ நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி மிக்செய்ல் கோர்பச்சேவ் பேசினார்.

அப்போதே இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

வார்ஸோ நாடுகள் ஒவ்வொன்றும் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளவேண்டும்.

உலகப்பிரச்சினைகள் குறித்தும் வார்ஸோ நாடுகள் சுதந்திரமாக முடிவுகளை மேற்கொள்ளவேண்டும்.

முடிவுகள் குறித்து சோவியத் யூனியன் ஆலோசனை வழங்கும்; விமர்சிக்கும் ஆனால் தலையிடமாட்டாது.

இப்படி திரு: கோர்பச்சேவ் சொன்னார். [எ]

## சீன மாணவரைச்சுட்டதற்கு பிரதமர் லீ கூறும் காரணம்

பீகிங் ஜூலை 9

கண்ணீர்ப்புகைக் குண்டுகள் கைவசம் இல்லாத காரணத்தால்தான் ராணுவ வீரர்கள் மாணவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்தது என்று சீன பிரதமர் லீபெங் தெரிவித்தார்.

டானியல் வொங் என்ற அமெரிக்கப் பிரமுகரிடம் திரு லீபெங் இதனைத்தெரிவித்ததாக ராய்ட்டர் செய்திஸ்தாபனம் அறிவித்தது.

மாணவர்களின் கிளர்ச்சியை அடக்கச் சென்ற ராணுவத்தை மாணவர்கள் தாக்கினர்; கொன்றனர்; அச்சமயத்தில் இராணுவ வீரர்களிடம் ரப்பர் குண்டுகள் மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் கிடையா. எனவே துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ள இராணுவத்தினர் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இப்படி பிரதமர் லீபெங் தெரிவித்தார். (எ)

## ஆப்கன் மோதலில் ஈரான் நிலை பாக். அமைச்சரிடம் விளக்கம்

டெஹ்ரான், ஜூலை 9

ஆப்கனிஸ்தானில் அமைதி நிலவுவதற்கு இஸ்லாமபாத், டெஹ்ரான், மாஸ்கோ, ஆகியவற்றுக்கு இடையே ஒத்துழைப்பு இருக்க வேண்டியது அவசியம்.

இப்படி ஈரான் தலைவர்கள் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் யாகுப் கானுக்குத் தெரிவித்தனர் என்று பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

கடந்த மாதம் சோவியத் யூனியனில் அதிபர் கோர்பச்சேவுடன் நடத்திய பேச்சுக்களின் விவரத்தை ஈரான் தலைவர் ரப்ஸன் ஜானி பாகிஸ்தான் அமைச்சரிடம் தெரிவித்தார்.

ஆப்கன் விவகாரத்தில் வெளிநாடுகள் தலையிடுவதை ஈரான் விரும்பவில்லை. அப்பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகள் இதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் ஈரான் கேட்டிருக்கிறது.

பாகிஸ்தான் ஆதரவைப் பெற்ற கெரில்லாக்களும் டெஹ்ரானின் ஆதரவைப் பெற்ற கெரில்லாக்களும் ஒற்றுமையாக ஆப்கன் அரசை அமைக்க வேண்டும் என்பதே ஈரானின் விருப்பம் என்று பாகிஸ்தான் அமைச்சர் யாகுப்கான் சொன்னார். (எ)

## பாக். இளைஞருக்கு எகிப்தில் தூக்கு!

கெய்ரோ, ஜூலை 9

இரண்டு கிலோ ஹெரோயினை கடத்திய குற்றத்திற்காக பாகிஸ்தானில் இளைஞன் ஒருவனை எகிப்து அரசு நேற்று தூக்கிலிட்டது.

கெய்ரோ விமான நிலையத்தில் போதை மருந்துடன் வந்திறங்கியபோது இந்த இளைஞன் கைது செய்யப்பட்டான். (ஓ-எ)

ஆதிவாசிப் பெண்ணை

## பொலீஸார் துகிலுரிந்து பகிரங்கமாக இம்சித்தனர்

பட்னா, ஜூலை 9

பொலிசார் ஒரு ஆதிவாசிப் பெண்ணை நிர்வாணமாக்கி, நையப்புடைத்தனர். பிஹாரில் நடந்துள்ள இந்த நிகழ்ச்சி பற்றி அறிய வருவதாவது:-

ஏழு பொலிசார் ஆதிவாசி இளம்பெண் ஒருத்தியின் சாரியை நீக்கி அவளுடைய மேற் சட்டையைக் கிழித்து விட்டு குண்டாந்தடிகளால் அடித்தனர். இது பட்டப்பகலில் நடந்தது பெண் இரத்த வெள்ளத்தில் மயக்க நிலையில் கிடக்க பொலீசார் சந்தோஷமாக அந்த இடத்தைவிட்டுச் சென்றனர்.

இந்த சம்பவத்தைப் பற்றி அறிவித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அங்கு கூடிய மக்களை எச்சரித்து விட்டு அந்தப் பொலிசார் சென்றார்கள்.

வீட்டில் தாயாரும் தமையனும் இல்லாத வேளையில் புகுந்த பூலி காவல் தளத்தைச் சேர்ந்த இந்தப் பொலீசார் மாலதி என்ற இப்பெண்ணுடன் தகாத முறையில் நடந்து கொள்ள முயற்சித்தார்கள். அப்பெண் ஆட்சேபித்துக் குரல் எழுப்பவே அவரை அடித்து நொறுக்கினார்கள்.

முக்கால் மணி நேரமாக ஏழு பொலிசாரும் சேர்ந்து அப்பெண்ணை இம்சித்தார்கள். (க)

மாணவருக்கு எதிரான

## சீன அரசின் நடவடிக்கையை மாஸ்கோ குறை கூறியது!

மாஸ்கோ, ஜூலை 9

மாணவரின் ஜனநாயகக் கிளர்ச்சியை அடக்க இராணுவ நடவடிக்கையை எடுத்த சீன அரசை சோவியத் யூனியன் நேற்று முன்தினம் பகிரங்கமாக குறைகூறியது.

சோவியத் டெலிவிஷனில், சோவியத் அரசியல் விமர்சகர் அலெக்ஸாண்டர் பெவின் பேசுகையில் சீன அரசின் செயல் வருத்தம் தருவதாகத் தெரிவித்தார்;

சீனக்கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து ஷாஓ ஷியாங்கை நீக்கியதற்குக் கூறப்பட்ட காரணத்தை ஏற்கமுடியாது என்றும் திரு. பெவின் சொன்னார் (எ

### பர்மாவில் மீண்டும் ஆர்ப்பாட்டம்

பாங்கொக், ஜூலை 9

பர்மா (மியான்மார்) வில் மீண்டும் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடங்கியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இராணுவ அரசின் தடை உத்தரவை மீறி 10 ஆயிரத்திற்கு அதிகமானோர் கடந்த புதன்கிழமை ஊர்வலம் நடத்தினர். (எ)

## சிலி ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிர்க்கட்சி அபேட்சகர்

சந்தியாகோ, ஜூலை 9

சிலி நாட்டு எதிர்க்கட்சிகள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவான ஒரு அபேட்சகரை நிறுத்த முடிவெடுத்துள்ளன.

கிறிஸ்துவ ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பற்றிசியோ அயில்வின் என்பவரே அவர்களுடைய அபேட்சகர் ஆவார்

சிலியில் 20 ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுதுதான் முதல் தடவையாக ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## அகாலிதன் கட்சி போட்டியிட மந்திரி பூட்டாசிங் நிபந்தனை

ஜலந்தர், ஜூலை 9

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விசுவாசம் தெரிவிக்கக் கூடியதாக கட்சியாப்பை அகாலிதள் கட்சி திருத்தவேண்டும் என்று உள்துறை அமைச்சர் பூட்டாசிங் கோரியிருக்கிறார்.

இதனைச் செய்யத் தவறினால் வருகிற நாடாளுமன்றத்தேர்தலில் போட்டியிட அகாலிதள் கட்சிக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் உள்துறை அமைச்சர் தெரிவித்தார். (எ)

### ஈரான்கேட் வழக்கு

வாஷிங்டன், ஜூலை 9

ஈரான்கேட் ஊழல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் வெள்ளை மாளிகை அதிகாரி ஒலிவர் நோர்த்துக்கு அமெரிக்க நீதிமன்றம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 3வருட சிறைத்தண்டனையும் ஒன்றரை லட்சம் டாலர் அபராதமும் விதித்தது. (எ)

## அணு ஆயுத ரசாயன ஆயுதமற்ற ஐரோப்பாவை அமைக்க வேண்டும்

### வார்சோ உச்சி மாநாட்டு அறிக்கையில் வலியுறுத்து

புக்காரெஸ்ட், ஜூலை 9

இராணுவ முறையைக் கடைப்பிடிக்காது அரசியல் வழியில் பாதுகாப்புக்கு உழைக்குமாறும் ஐரோப்பாவையும் உலகையும் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க எல்லா நாடுகளுடனும் ஒத்துழைக்கத் தயாராய் இருக்குமாறும் ஏழுநாடுகளின் வார்சோ ஒப்பந்த அமைப்பு கேட்டுக்கொண்டிருக்கிறது.

ருமேனியத் தலைநகர் புக்காரெஸ்டில் நேற்று முடிவடைந்த இரண்டுநாள் உச்சி மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கை இவ்வாறு கூறியது.

ஐரோப்பாவிலுள்ள குறுந்தொலைவு ஏவுகணைகளை அகற்றுவதற்கான பேச்சுக்களைத் தொடங்குமாறு நேட்டோ ஒப்பந்தநாடுகளை இந்த அறிக்கை கேட்டுக்கொள்கிறது.

தற்பாதுகாப்புக்கான அணு ஆயுதக் குவிப்பு என்ற நேட்டோவின் உத்தி காலத்துக்குப் புறம்பான அபாய நடவடிக்கை என்று அறிக்கை கூறுகின்றது.

அது மேலும் குறைந்த அளவில் ராணுவச் சமச்சீர் நிலையைப் பராமரிக்குமாறு நேட்டோவின் மேற்கு நாடுகளைக் கேட்டுக்கொண்டது. குறைந்த அளவில் ஏவுகணைகளை முற்றிலும் அழிப்பது குறித்துப் பேச்சு நடத்த நேட்டோ ஒப்புக்கொண்டால் ஐரோப்பாவிலிருந்து இத்தகைய ஏவுகணைகளின் எண்ணிக்கையைக் குறைக்கத் தயார் என்று ஸ்ட்ராஸ்பேர்க்கில் திரு. கோர்பச்சேவ் அறிவித்ததை இந்த அறிக்கை ஆதரித்தது'

அணு ஆயுத, ரசாயன ஆயுதமற்ற ஐரோப்பாவை உருவாக்குமாறு அறிக்கை கேட்டுக்கொள்கிறது.

உலகில் போர் அச்சுறுத்தலை அகற்றுவது என்னும் லட்சியம்குறித்து தங்களது கடமைப்பாட்டை வார்சோ நாடுகள் மீண்டும் வலியுறுத்தின, ஐரோப்பாவின் பாதுகாப்புக்காக நேட்டோ நாடுகளுடன் அரசியல் ராணுவ நிலைகளில் உரையாடல் நடத்த உறுதி பூணுவதாக இந்த அறிக்கை தெரிவிக்கிறது. (க)

## 9 ஆம் வகுப்பில் சேர விரும்பும் 7 வயதுச் சிறுமி

கல்கத்தா, ஜூலை 9

''விந்தைப்பெண்'' என்று கருதப்படும் மௌசுமி என்ற ஏழு வயதுச் சிறுமி கல்விமான்கள் உட்படப் பலரை வியப்பில் ஆழ்த்தியுள்ளார். விஞ்ஞான அரசியல், மற்றும் துறைகள் சம்பந்தமான சிக்கலான கேள்விகளுக்கு எல்லாம் மௌசுமி உடனுக்குடனே சரியான பதில் அளிக்கின்றார்.

இந்தக் 'குழந்தை மேதை' 9ஆம் வகுப்பிலாவது சேர அனுமதி வழங்குமாறு மேற்கு வங்காள மாகாண அரசாங்கத்தைக் கோரியுள்ளார். இவ்வாறு படித்து உலகிலேயே பாடசாலைப் படிப்பை மிகக்குறைந்த வயதில் முடித்தவர் என்ற சாதனையைப்பெற அவர் விரும்புகின்றார்.

ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசும் இந்தச் சிறுமி நிமிடத்துக்கு 47 வார்த்தைகள் என்ற வேகத்தில் தட்டச்சு அடிக்கக்கூடியவராக இருக்கின்றார். (க)

தென் ஆசியாவில்

## இரண்டு கோடிக்கு மேலான குழந்தைத் தொழிலாளர்

### மகாநாட்டு அறிக்கை கூறுகின்றது

புதுடில்லி, ஜூலை 9

''தென் ஆசியாவில் இரண்டு கோடிக்கு மேலான குழந்தைத் தொழிலாளர்கள் அடிமைகள் போலவேலை செய்கின்றார்கள். தென் ஆசிய நாடுகளின் அரசாங்கங்கள் அவர்களைப் பற்றி அக்கறை செலுத்தவில்லை.

பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான், நேபாளம்ஆகியவற்றின் 60க்கு மேலான தொண்டர்கள் கலந்துகொண்ட மாநாடு ஒன்று வெளியிட்ட அறிக்கை இவ்வாறு கூறியது.

'அநேக தென் ஆசிய நாடுகளில் குழந்தை உழைப்புப் பற்றித் தக்க சட்டங்கள் கிடையாது. இருக்கும் சட்டங்களும் சரியாக அமுல்படுத்தப்படவில்லை' என அறிக்கை கூறியது.

'இந்தநாடுகளின்சமுதாய, பொருளாதார, அரசியல் அமைப்புக்களில் தீவிர மாற்றம் ஏற்பட்டாலே இந்தக் குழந்தைகள் விமோசனம் காண முடியும்' எனவும் அறிக்கை கூறியது. (க)

### உதைபந்தாட்ட ரசிகர்களின் வன்முறை

உதைபந்தாட்ட ரசிகர்கள் கைகலப்பில் ஈடுபட்டபோது ஏறக்குறைய 50 பேர் காயமுற்றார்கள். அவர்கள் குண்டாந்தடிகள், இரும்புக் கம்பிகள், கற்கள் ஆகியவற்றைப் பாவித்து மோதிக் கொண்டார்கள்.

இந்தச் சம்பவம் தென் பங்களாதேஷின் சிட்டகொங் விளையாட்டரங்கில் 6ஆம் திகதி நடைபெற்றது (க)

### சீனாவில் விடுமுறைகள் ரத்து

பீக்கிங், ஜூலை 9

சீன அரசாங்கம் சகல அரசாங்க ஊழியர்கள், கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகங்களின் ஊழியர்கள் ஆகியோரின் கோடைகால லீவு அனைத்தையும் கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை ரத்துச் செய்துள்ளது.

எளிய வாழ்க்கையை ஊக்குவித்து கடந்த வாரங்களில் சீனாவில் நடைபெற்ற அரசியல் குழப்பங்களால் ஏற்பட்ட நஷ்டங்களை ஈடு செய்யவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அரசாங்கம் அறிவித்துள்ள .

### மரண தண்டனை

ஹவானா, ஜூலை 9

கியூபாவில் இடம் பெற்ற ஊழல் மற்றும் போதை வழக்கு விசாரணையில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட நான்கு இராணுவ உயர் அதிகாரிகளுக்கு. இராணுவ நீதிமன்றம் மரணதண்டனை விதித்தது. (எ)

### சிந்தனைகள்

அல்லாஹ்வுக்கு மிகவிருப்பமான நோன்பு (ரமழான் நோன்பைத் தவிர) ஹஜ்ஜுடைய மாதம் முதல் பத்து நாட்களும் நோன்பு வைப்பதாகும். எனவே ஹஜ்ஜுடைய மாதம் நோன்பைக் கொண்டும் கௌரவிக்கப் பட்டுள்ளது. இக்காலங்களில் நோன்பு வைப்பவர்கள் மிகக் குறைவானவர்களே! அதிகம் நல்ல செயல்கள் செய்து இறைவனை நெருங்கி வாழ விரும்பும் நாம் ஏன்? இத்தகைய நல்ல செயல்களைச் செய்யாமலிருக்கின்றோம். இத்தகு செயல்களைப் புரிவதில் இன்னும் ஏன் தாமதம் செய்கின்றோம். இப்பத்து நாட்களின் நோன்பையும் வைத்து நற்பயனடைய முயற்சிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரம்மி கூந்தல் தைலம்

இத்தைலத்தை தினமும் சிரசில்
பாவித்து வந்தால் தலைமுடி நரைத்தல்,
தலை மயிர் உதிர்தல், தலைவலி, கண்ணீர்
வடிதல், தும்மல், மூக்கு அரிப்பு
முதலிய ரோகங்களுக்கு
நிவாரணம் தருவதோடு
கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும்
கருமையாகவும் வளரச் செய்யும்

**க. செ. கைலாசம்பிள்ளை & சன்ஸ்**
**மருந்துக்கடை**
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 23135



# உதயன்

10 07 1989 திங்கட்கிழமை



## பொன்னாங்காணித் தைலம்

சிரசில் தேய்த்து ஸ்நானம் செய்து வந்தால்
மண்டையிடி, தலைவலி, பித்தக் கிறுகிறுப்பு,
பீனிசம், அந்திக்கண் மங்குதல், தூக்க
மின்மை, கண்எரிச்சல், உஷ்ணக்காந்தல்
முதலான வியாதிகளைக் குணமாக்குவதோடு
மூளைக்குக் குளிர்ச்சியையும், கண்ணுக்குப்
பிரகாசத்தையும் கொடுத்து
கூந்தலை அழகாகவும் கறுப்பாகவும்
நீளமாகவும் வளரச் செய்யும்.

**க. செ. கைலாசம்பிள்ளை & சன்ஸ்**
**மருந்துக்கடை**
(5) 76, பெரியகடை, யாழ்ப்பாணம்:
போன்: 23135


## அமெரிக்க நலனைக் கருத்திற் கொண்டு

# இலங்கைக்கு $3\frac{1}{2}$ கோடி டாலர் உதவி

# காங்கிரஸிடம் யு.எஸ். எயிட் சிபாரிசு

கொழும்பு, ஜூலை 10

இலங்கையின் பொருளாதார, அரசியல் ஸ்திர நிலையைப் பேணுவதற்காக 3 கோடி 45 லட்சம் டாலர் உதவியை வழங்கவேண்டும் என்று யு. எஸ். எயிட் (U.S.AID) ஸ்தாபனம் அமெரிக்க காங்கிரஸைக் கோரியுள்ளது.

யு. எஸ். எயிட் ஸ்தாபனம் சமர்ப்பித்துள்ள அறிக்கையின் படி, தொடரும் இன வன்செயல்களால் இலங்கையின் வளர்ச்சி குன்றியுள்ளது என்றும் தேசிய வருமானம் குறைந்து வருவதாகவும் தெரிய வருகிறது

அமெரிக்க நலன்களை கருத்தில் கொண்டும் இந்து மகா சமுத்திரத்தில் இலங்கை வகிக்கும் புவியியல் முக்கியத்துவத்தைக் கருதியும் இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரம் பற்றி நாம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டியுள்ளது.

அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் தங்கிச் செல்ல இலங்கை அனுமதித்து இருக்கிறது.

''வொய்ஸ் ஒப் அமெரிக்கா'' -வானொலி அஞ்சல் நிலையமும் இலங்கையில் இயங்கி வருகிறது.

-இப்படி யு. எஸ். எயிட் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (உ-எ)

## திருக்கல்யாண உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

நல்லூர், ஸ்ரீகைலாசபிள்ளையார் கோவில் சிவன் திருக்கல்யாண உற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

அம்பாள் தபசு காலை 11 மணிக்கும், சுவாமி ஆட்கொள்ளுதல் பி. ப. 3 மணிக்கும் திருக்கல்யாணம் 5 மணிக்கும் இடம் பெறும். பின் திருத்தண்டிகையில் விசேஷ மேளக் கச்சேரி சகிதம் சுவாமி வீதியுலா இடம்பெறும். (க)

## ஓய்வு பெற்ற பொலீஸ்காரர் கொலை

மட்டக்களப்பு, ஜூலை 10

மட்டக்களப்பு வெல்லாவெளியில், ஓய்வு பெற்ற பொலீஸ்காரர் ஒருவர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அறுபது வயதான கே. செல்வநாயகம் என்பவரே கொலையுண்டவராவார். (அ-21)

## தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கோப்பாய், இருபாலை பகுதிகள் நேற்று இந்திய அமைதிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்மேற்கொள்ளப்பட்டன.

தேடுதலின்போது கைது செய்யப்பட்டோர் பற்றிய விபரம் குறித்து தகவல் ஏதும் தெரியவரவில்லை. (ஒ-10)

## பஸ்ஸுக்கு தீ வைப்பு

கொழும்பு, ஜூலை 10

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலயத்தில் இருந்து கொழும்பு வந்துகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றை நேற்று முன்தினம் காலை இனந்தெரியாதவர்கள் சங்கராஜமாவத்தையில் வைத்து கொளுத்தினர். (உ-எ)

## கல்முனையில்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குள் இருக்கப் பணித்தனர்.

அத்தோடு நகரில் காலை முதல் நண்பகல் வரை ஊரடங்கையும் அமுல் செய்திருந்தனர்

ஊரடங்கு நண்பகலுடன் நீக்கப்பட்டதனால், என்ன நேரத்தில், பாரதூரமாக ஏது நடக்குமோ என்ற அச்சத்துடன் மக்கள் இருக்கிறார்கள்.

கடந்த மே மாதத்திலும் கல்முனைப் பகுதியில் அமைதி குலைந்திருந்தது தெரிந்ததே. (அ-21)

## அடையாள காட்டுகள் மீட்பு

கொழும்பு ஜூலை 10

தென் பகுதியில் தீவிர வாதிகளால் அபகரிக்கப்பட்டதேசிய அடையாளக் கார்ட்டுக்களில் சுமார் 2 ஆயிரத்து 500 பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டன என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

## பயிலுநர்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

தோட்டப்புற அல்லது கிராமப்புறங்களில் ஜீ. சி. ஈ. உயர்தரத் தகைமை இல்லாதவர்கள் சாதாரண தரத்துடன் விண்ணப்பிக்கலாம்.

தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் விசேட தராதரம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இவர்களும் விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

மாகாண ரீதியில் எழுத்து, வாய்மூல நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

தெரிவான விண்ணப்பதாரிகளுக்கு செப்டம்பர் முதல் நியமனம் வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகளே தாங்கள் தெரிவாவதை நிர்ணயித்துக்கொள்ளும் வகையில நேர்முகப் பரீட்சை அமையும்.

தெரிவின்போது தொண்டர் ஆசிரியருக்கு 15 புள்ளிகள் மேலதிகமாக வழங்கப்படும். (உ எ)

## அனைத்து --

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

த்தை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

எமது மக்கள் மத்தியில் இருந்து உங்களை அந்நியப்படுத்துவதற்கான வழிகளை ஏற்படுத்துபவர்களை நம்பி தமிழ் மக்களின் எதிரிகளுடன் இணக்கமான முற்படுகிறீர்கள்.

தமிழர்கள்'யார் எதிரிகள் யார், என்பதை இப்போதாவது இனங்கண்டு கொள்ளவும் தமிழ் இனத்தின் எதிரிகளுடன் இணைந்து விட்டீர்கள் என்று வரலாறு கூறப்போவது உறுதி. எனவே நீங்கள் மேற்கொண்டுள்ள முயற்சியைக் கைவிட்டு விடுங்கள்

கடந்த காலத்தில் நடந்தவற்றை மறப்போம் ஒன்றுபடுவோம்.

இயக்கங்கள் இணைந்துவிடக்கூடாது என்பதற்காக சிங்கள அரசும் ஏனைய பிற சக்திகளும் எதனையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். அதேபோன்று தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட சில தமிழ்த் தலைவர்களும் இதே முயற்சிகளையும் மேற் கொள்ளுகின்றனர்.

எமது மக்களின் சுயநிர்ணய உரிமைகளை மீட்கவே நாம் அன்றுபுறப்பட்டோம். ஆனால் அதனை விரைந்து செயற்பட பிரேமதாசா காலக்கெடு கொடுத்துள்ளார் இந்த இக்கட்டான வேளையில் பிற சக்திகளது பிழையான வழி நடத்தலுக்கு இடம் கொடுக்காது மக்களது எதிர்கால நன்மை கருதி ஒன்றிணையுங்கள். இதுவே நீங்கள் தமிழர்களுக்கு செய்யும் கடைசிப் பேருதவியாகும் —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பார்மஸி உரிமையாளர் கொலையுண்டார்

யாழ் நகரில் பருத்தித்துறை வீதியில் நேற்று முன்தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்டவர் துரைரத்தினம் பிரேம்குமார் (வயது 37) என அடையாளம் காணப்பட்டார்.

இவர் யாழ்நகரிலுள்ள பிரபல பார்மஸி ஒன்றின் உரிமையாளராவார்.

சடலம் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு விசாரணையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ 3-9)

## தெல்லிப்பளையில்

தெல்லிப்பளை அர்ச். அன்னம்மாள்கோவிலடியில் நேற்று இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் தெல்லிப்பழை வீமன்காமத்தைச் சேர்ந்தவரென்று அறியப்படுகிறது. (ஒ-51)

## அளவெட்டியில்

அளவெட்டி வடக்கு. அரசினர் வைத்தியசாலைக்குச் சமீபமாக நேற்று மாலை 4 மணியளவில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சடலத்துக்கு அருகில் அவர் வந்த சைக்கிள் காணப்பட்டது. கொல்லப்பட்டவர் அடையாளம் காணப்படவில்லை. (ஒ-51)

## ரெனிக்கு---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் ஒரு செய்தி கூறுகிறது. ஆனால் இனி அவர் தீவிர அரசியலில் ஈடுபடமாட்டார் என்றும் தெரிகிறது.

திரு. டிமெல் மீதான வழக்கு இம்மாதம் 28 ஆம் திகதி விசாரணைக்கு வரவுள்ளது. (உ-எ)

## கடிதங்களைச் சபையில் சமர்ப்பித்தமை குறித்து இந்தியா கண்டனம்

புதுடில்லி, ஜூலை 10

ஜனாதிபதி பிரேமதாசாவும், பிரதமர் ராஜீவ் காந்தியும் தமக்கிடையே எழுதிய கடிதங்களை இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது ராஜதந்திரம் இல்லாத செயல் என்று இந்தியா சண்டித்துள்ளது.

புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் இது சம்பந்தமாகத் தெரிவித்ததாவது :-

பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அனுப்பி வைத்துள்ள இரண்டு கடிதங்களும் அமைதிப்படை விலகல் சம்பந்தமான இந்திய நிலையை நன்றாகத் தெளிவுபடுத்தியுள்ளன.

இக்கடிதங்களில் தெரிவித்தவைக்கு மேலாக மேலும் கூற வேண்டிய எதுவும் இந்தியாவிடம் இல்லை.

பிரதமர் காந்தியின் கடிதங்களை இலங்கை நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி பிரேமதாச சமர்ப்பித்து இருக்கிறார். அக்கடிதங்கள் பின்னர் பத்திரிகைகளில் பிரசுரமாகின.

ராஜதந்திரம் இதுவல்ல. தேர்தல் வாக்குறுதிகளை ஜனாதிபதிபிரேமதாசா வழங்கி இருக்கலாம். ஆனால் அந்த வாக்குறுதிகள் சர்வதேச உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் கட்டுப்படுத்த மாட்டா.

ஒப்பந்தம் கைச்சாத்தான காலத்தில் இருந்தே இந்தியா இலங்கையுடன் பரஸ்பரம் பேச்சுக்கள் நடத்தியே வந்துள்ளது.

அப்போது, வடக்கு-கிழக்கு நிலைமையில் முன்னேற்றம் காணும்போது அமைதிப்படை விலகிச்செல்லும் என்றே இந்தியா கூறி வந்தது.

— இப்படி அந்த அதிகாரி சொன்னார். (அ-எ)

## கிளிநொச்சியில் கிரனேட் வெடிப்பு

கிளிநொச்சி டிப் பாசச தியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் கிரனேட் வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெறது.

இச்சம்பவத்தின்போது மூவர் காயமடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்,

இரத்தினபுரத்தைச் சேர்ந்த ம். அந்தோனிப்பிள்ளை நல்லையா [வயது 58] அவரது மனைவி மரி மார்கிரட் [48 வயது] மற்றும் முத்துலிங்கம் [20 வயது[ ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். [ஒ-163]

## வானத்தில்----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''பாரசூட்'' மூலம் குதித்த திருமணத் தம்பதிகளுக்கு, அவ்வாறே குதித்த மத குருவானவர் முறைப்படி மதச் சடங்குகளை நடத்தி வைத்தார். 'பாரசூட்' மூலம் குதித்த பெற்றோரும், தம்பதிகளுக்கு முத்தமிட்டு ஆசி வழங்கினர்.

விமானத்திலிருந்து காதலர்களாக குதித்தவர்கள் கல்யாணமானவர்களாக தரை இறங்கினர்! (அ-9)

## பதவியேற்கவிருக்கும்---

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

நாடாளுமன்றம் செல்வது தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

நாம் நாடாளுமன்றம் செல்வதற்கு ஜனாதிபதியால் ஏற்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலை திருப்தியாக உள்ளது.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டியதில்லை. நிரந்தரத் தீர்வைப்பாக அது இருக்க வேண்டும்.

நிரந்தரத் தீர்வு ஒன்றுக்கு அரசியலமைப்பின் ஆறுவது திருத்தம் இடையூறாக உள்ளது. அதனை நீக்க எமது அமைப்பு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

இந்திய அமைதிப்படை வெளியேறவேண்டும். அதற்கான கால அட்டவணை நிர்ணயிக்கப்படவேண்டும்.

இந்தியா, இலங்கை மற்றும் தமிழர் குழுக்கள் இணைந்து இந்த முடிவை எடுக்க வேண்டும்.

மாகாண சபையைக் கலைக்க வேண்டும் என்ற நிலை இல்லை. ஆனால் இன்றையநிலைதொடர்ந்தால், மக்களின் நலன் கருதி எமது முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும்.

நாடாளுமன்றத்துக்கு செல்வதற்கு பொதுவான நிலை உருவாகி இருப்பதாக எமது அமைப்பு திருப்தியடைகிறது.

வெள்ளிக்கிழமை ஜனாதிபதி பிரேமதாசாவை சந்தித்தோம். தடுப்புக் காவலில் இன்னமும் உள்ள 26 ஈரோஸ் உறுப்பினர்களும் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் விடுவிக்கப்படுவர் என்று அப்போது உறுதியளிக்கப்பட்டது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்தநிறுத்தம் ஏற்படவேண்டும் என்ற எமது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு நிலைமை பற்றி ஜனாதிபதிக்கு எடுத்துச் சொன்னோம்.

எமதுஇயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்படுகிறார்கள்; கொல்லப்படுகிறார்கள்.

இதனால் நாம் பாதுகாப்பும் சட்டபூர்வமாக ஆயுதப் பாதுகாப்பும் தேடவேண்டிய நிலைக்கு வந்துள்ளோம்.

அமைதிப்படை விலகலுக்கான கால அட்டவணையுடன் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை பூரணமாக அமுல்படுத்துவதும் சேர்க்கப்படவேண்டும்.

நாடாளுமன்றம் செல்லும் எமது முடிவு விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

—இப்படி அவர் சொன்னார். (உ-எ)


## M. R. G. TRAVELS

## யாழ் - கொழும்பு சொகுசு பஸ் சேவை

(பதிவிடங்கள்)

**கொழும்பு:**
1. ஹைஸ்டார் ஹோட்டல், வெள்ளவத்தை.
2. ராப்ஜி லோட்ஜ், பம்பலப்பிட்டிய,
3. அஜந்தா ஹோட்டல், ஒல்கொட்மாவத்தை.

புறப்படும் நேரம்:
வெள்ளவத்தையிலிருந்து
காலை 5.15 மணி

**யாழ்ப்பாணம்:**
1. ஹோட்டல் சோபிகா, ஆஸ்பத்திரி வீதி.
2. R B. புக்கிங் சென்ரர், நவீன சந்தை.
3. சியாமளா கூல் பார், நவீன சந்தை.

புறப்படும் நேரம்:
யாழ் பஸ் நிலையத்திலிருந்து
காலை 7.00 மணி

கொழும்பில் தங்குமிட வசதிகளுக்கும், வெளிநாட்டுத் தொலைத் தொடர்பு வசதிகளுக்கும்

★ நாடுங்கள் ★

**HIGH STAR LODGE,**
41/2, W.A. SILVA MAWATHA,
COLOMBO - 6
T- P. No: 500767, 501921

(1180)


## OBITUARY

### Mr. Robert Ambalapillai Vairamuttu

( Retired Station Master )

Mr. R. A. Vairamuttu beloved husband of Late Lucy Annamahl, loving father of Kumar (Australia), father - in - law of Rubini (Australia), grand father of Daren, brother of late S. V., late S. R., C. P. Vairamuttu and Mrs. J. M. Chittampalam passed away peacefully at Navajeevanam, Paranthan on 8th July 1989.

Funeral took place on 9th July at 10 a. m; Friends and relations please accept this intimation.

**Mrs. Chittampalam**

Tellippalai.

(11495)

## மரண அறிவித்தல்கள்

### திரு. து. பிறேம்குமார்

[முன்னாள் பிரதான எஞ்சினியர் வாழைச்சேனை பேப்பர் கூட்டுத்தாபனம், வாழைச்சேனை, றோயல் பார்மசி உரிமையாளர் யாழ்ப்பாணம்]

திரு. து: பிறேம்குமார் 8-7-89 அன்று அகால மரணமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் அறியத் தருகின்றோம். அன்னார் காலஞ்சென்ற திரு. துரைரத்தினம் திருமதி துரைரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற திரு. சோ. சிவசம்பு, திருமதி அன்னலட்சுமி சிவசம்பு (No3, வாசலரோட் கொட்டாஞ்சேனை) அவர்களின் அன்பு மருமகனும், நந்தினியின் அன்புக்கணவரும், செல்வி லச்சுமி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி) செல்வன் திவாகரன் (சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காமினி, அமிர்தா, பிரகாஸ். வனஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சோமசுந்தரம், மேனகா, பாலசுந்தரம், சாந்தினி, சிவசுந்தரம், சற்குணசிங்கம், குருமூர்த்தி, ஜெயக்குமார், முத்தையா, சாந்தி ஆகியோரின் சகலனுமாவார். அன்னாரின் பூதவுடல் இல: 39, செட்டித்தெரு, நல்லூரில் அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக இன்று காலை 11 மணிக்கு (10-7-89) செம்மணி மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

**திருமதி. துரைரத்தினம்.**

No 39, செட்டித்தெரு,
நல்லூர்.

(1179)

### திரு. கார்த்திகேசு ஜெயரத்தினம்

( Radio Grapher )

திரு. கார்த்திகேசு ஜெயரத்தினம் காலமானார்: இவர் பத்மராணியின் அன்புக் கணவரும், ஷாமளின் (தனியார் மருத்துவக் கல்லூரி), ஷயாணி, ஸ்ரீகாந் (டென்மார்க்), ஷிவாணி (திருக்குடும்ப கன்னியர்மடம் ஆங்கில பாடசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பரிமளம், செல்லத்தம்பி, நேசமலர், காலஞ்சென்ற புஸ்பமலர், காலஞ்சென்ற அற்புதரத்தினம், சந்திரசேகரம் (கிச்சி), அரசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேவராசா (அலெக்சாண்டர் இண்டஸ்றீஸ்), வைத்திய கலாநிதி பத்மநாதன் (U. K.), லோகேந்திரன் (U. K.), புவனேந்திரன் (சுகாதார பரிசோதகர்,மட்டக்களப்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-7-89 செவ்வாய்க்கிழமை நாளை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்காடு மயானத்திற்குக் காலை 10 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல் :

**மனைவி, பிள்ளைகள்**

'பத்ம வாசா'
உரும்பராய் தெற்கு.
உரும்பராய்.

(11494)


இப்பத்திரிகை நி உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 393/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10 - 07 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org